1. எனக்குப் பிடித்த உலகம்

நான் மீனா,

எனது வீட்டில்...

இனிமையாகப் பாடப் பிடிக்கும்.

சுவையாகச் சாப்பிடப் பிடிக்கும்.

பாட்டியிடம் கதை கேட்கப் பிடிக்கும்.

அம்மா, அப்பாவுடன் உலாவச் செல்லப் பிடிக்கும்.

அண்ணனுடன் சேர்ந்து வேலைகளைச் செய்யப் பிடிக்கும்.

எனது சுற்றுப்புறத்தில்...

அக்கம் பக்கத்து நண்பர்களுடன் விளையாடப் பிடிக்கும்.

கடைத் தெருவிற்குச் செல்லப் பிடிக்கும்.

பூங்காவில் ஊஞ்சலாடப் பிடிக்கும்.

சின்னச் சின்ன குறும்புகள் செய்யப் பிடிக்கும்.

மைதானத்தில் சிறிய மிதிவண்டி ஓட்டப் பிடிக்கும்.

எனது பள்ளியில்...

செடிகளை நட்டு வளர்க்கப் பிடிக்கும்.
ஆசிரியர் என்னைப் பாராட்டுவது பிடிக்கும்.
கலை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளப் பிடிக்கும்.
பள்ளியில் போட்டி போட்டு வேலைகள் செய்யப் பிடிக்கும்.
பள்ளி நண்பர்களுடன் மாலையில் குழுவாய் விளையாடப் பிடிக்கும்.

உனக்கு என்னென்ன செய்யப் பிடிக்கும் ? எழுது.

உன்னுடைய...

வீட்டில்	சுற்றுப்புறத்தில்	பள்ளியில்

லதா, ஜமால், ஜான், மேரி இவர்களும் உன்னைப் போலவே மூன்றாம் வகுப்பில் படிக்கின்றனர். வெவ்வேறு சுற்றுப்புறத்தில் வசித்து வருகிறார்கள். அவர்கள் கூறுவதைக் கேட்போமா?

நான் லதா,
என் பெற்றோருடன் கிளாப்பாக்கம்
கிராமத்தில் வசிக்கிறேன். எங்கள் வீட்டில்
ஒரு பசு மாடும் உள்ளது.

என் பெயர் ஜமால்.
நானும் என் அண்ணனும் எங்கள்
தாத்தா, பாட்டியுடன் நாகூரில்
வசிக்கிறோம்.

நான் ஜான். நானும் எனது
தங்கை மேரியும் அத்தை, மாமாவுடன்
வசிக்கிறோம். எங்கள் வீடு
தாம்பரத்தில் அடுக்கு
மாடி குடியிருப்பில் உள்ளது.

நீ எங்கு, யாருடன் வசிக்கிறாய்?
உன்னை வரைந்து எழுது.

இதைப் போல கூட்டுக் குடும்பம், தனிக் குடும்பம், சிறிய குடும்பம், பெரிய குடும்பம் எனப் பல வகையான குடும்பங்கள் உண்டு.

உன் குடும்பம் தனிக் குடும்பமா? கூட்டுக் குடும்பமா ?________________



என் குடும்பம் எனக்கு மிகவும் பிடிக்கும். என் அம்மா, நான் பள்ளியிலிருந்து வந்தவுடன் என்னை அன்பாக அணைத்துக் கொள்வார். பள்ளியில் நடந்தவற்றைப் பொறுமையுடன் கேட்பார். என் அண்ணன், என்னுடன் அடிக்கடி போட்டி போடுவான். எனக்குக் கோபம் வரும், என் தாத்தா சமாதானம் செய்து வைப்பார். எங்களுடைய பெற்றோர் எங்கள் மேல் தனிக் கவனம் செலுத்துகின்றனர். என் வீட்டில் என்னால் சுதந்திரமாகச் செயல்பட முடியும்.

வீட்டில் உன்னுடைய செல்லப் பெயர் என்ன ?________________

நீ வீட்டில் பேசும் மொழி எது ? ________________

உனக்கு அழுகை வந்தால் உடனே யாரைத் தேடிச் செல்வாய் ?________________

பயம் வந்தவுடன் யார் பின்னால் ஓடி ஒளிந்து கொள்வாய் ? ________________

உடல் நலம் இல்லாத போது யார் உன் அருகில் இருக்க வேண்டும் என நினைப்பாய் ? ________________

தெரியாமல் தவறு செய்தால் அதைத் தைரியமாக ஒப்புக் கொள்வாயா ? யாரிடம் ?

____

மீனா தன் பெருவிரல் ரேகையை ஒரு தாளில் பதித்தாள். அதைத் தன் குடும்ப உறுப்பினர்களின் உருவங்களாக மாற்றி அமைத்துள்ளாள்.



இது போல நீயும் உன் வீட்டில் உள்ளவர்களின் உருவங்களை உருவாக்கு.

உன்னுடைய வீட்டில் கேட்டு விவரம் சேகரி.

உன் தாத்தா சிறு வயதில் எந்த ஊரில் வசித்தார் ?

____

உன் பாட்டி சிறு வயதில் வசித்த ஊர் எது ? ______________________

அவர்கள் சிறு வயதில் நண்பர்களுடன் விளையாடிய விளையாட்டுக்கள் எவை ?

____

அவர்களுடைய நண்பர்களின் பெயர்களைக் கேட்டு எழுது

விளையாட்டில் நடந்த சுவையான நிகழ்ச்சிகள் பற்றி அவர்களிடம் விவரம் சேகரி.

அக்கால விளையாட்டுகள் இன்னும் நடைமுறையில் உள்ளனவா ?

____



அவற்றில் நீ விளையாடும் விளையாட்டுகள் எவை ?

____

உனக்கு மிகவும் பிடித்த விளையாட்டு எது ? ஏன் ? ______________________

____

தனியாக விளையாடுவாயா ? நண்பர்களுடனா ? ______________________

யார் யாருடன் விளையாடுவாய் ?





பள்ளியில். . .	வீட்டிற்கு அருகில் . . .
______________	______________
______________	______________
______________	______________



நம் வீட்டில் அனைவரிடமும் அன்புடன் நடக்கவும் விருப்பமான வேலைகளைச் செய்யவும் நினைத்ததைப் பேசவும் முடியும்.

இது சுமதி மற்றும் சரண் வீடு. தம் அம்மா, அப்பாவுடன் அவர்கள் வீட்டு வேலைகளைப் பகிர்ந்து செய்வதைப் பாருங்கள்.

நீ உன் குடும்பத்தினருக்கு என்னென்ன உதவிகளைச் செய்வாய் ?

விடுமுறை நாட்களை உன் குடும்பத்தினருடன் எப்படி இனிமையாகக் கழிப்பாய் ?

உன் வீட்டின் படம் வரை. அதைச் சுற்றி உனக்கு பிடித்த மரம், செடி, கொடிகளை வரைந்து அழகு செய்.





2. எனது சுற்றுப்புறம்

நாம் வாழும் பகுதியில் பல வகையான மக்கள் நம்முடன் சேர்ந்து வாழ்கிறார்கள். இம்மக்களின் தேவைக்காகச் சாலைகள், இருப்புப்பாதை, கடைத் தெரு, வழிபாட்டுத் தலங்கள் முதலியன அமைந்துள்ளன. இது போல உனது சுற்றுப்புறத்தில் என்னென்ன உள்ளன ? கூறுக. **லதா, ஜமால், ஜான் மற்றும் மேரியின் சுற்றுப்புறத்தைப் பற்றி அவர்கள் கூறுவதைக் கேட்கலாமா ?**



லதா

நாங்கள் கிளாப்பாக்கத்தில் வசிக்கிறோம். இந்த இடத்தில் சாலை ஐந்து கிளைகளாகச் செல்வதால் இப்பெயர் வந்தது. இங்கு நிறைய வீடுகள் உள்ளன. எங்கள் தெருவில் ஒரு குடிநீர்க் குழாயும், ஒரு நியாய விலைக் கடையும் உள்ளன. எங்கள் வீட்டிற்கு அருகில் ஒரு சிறிய மளிகைக் கடை உள்ளது. சில நேரங்களில் என் அம்மா அந்தக் கடையிலிருந்து மிட்டாய் வாங்கித் தருவார்கள். அப்பா சென்னையில் ஒரு சிற்றுண்டிச் சாலையில் வேலை செய்கிறார். விடுமுறை நாளில் மட்டும் வீட்டிற்கு வருவார்.

கலாவும், வானதியும் என்னுடைய தோழிகள். நாங்கள் சேர்ந்து பள்ளிக்குச் செல்வோம். மாலையில் ‘பாண்டி’ விளையாடுவோம். என் தோழியின் பெற்றோர்கள் விவசாயிகள். எங்கள் தெருவில் வசிப்பவர்கள் ஒன்று சேர்ந்து அனைத்து விழாக்களையும் கொண்டாடுவோம். நாங்கள் ஒருவருக்கொருவர் இனிப்புகள் வழங்கி மகிழ்வோம்.

லதாவின் தோழிகள் யார் யார் ?

லதாவின் வீட்டைச் சுற்றி என்னென்ன அமைந்துள்ளன ?

தான் வசிக்கும் பகுதியில் உள்ளவர்களுடன் சேர்ந்து லதா என்னென்ன செயல்களைச் செய்கிறாள் ?



ஜமால்

அம்மாவும் நானும் சித்தி, சித்தப்பாவுடன் சேர்ந்து வாழ்கிறோம். எங்களுடைய தாத்தா, பாட்டியின் வீட்டில் நாகூரில் ஒன்றாக வசிக்கிறோம். நாங்கள் மீனவக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். எங்கள் வீடு கடற்கரையோரத்தில் அமைந்துள்ளது. எங்கள் பழைய வீடு பழுதாகி விட்டது. எனவே நாங்கள் புதிய வீடு கட்டியுள்ளோம். தற்போது புதிய வீட்டைச் சுற்றி மரங்கள் வளர்த்து வருகிறோம். எங்கள் தெருவில் 30 வீடுகள் உள்ளன. இங்கு வசிப்பவர்களில் பெரும்பாலானோர் மீனவர்கள்.



ஜமால் யார் யாருடன் வசித்து வருகிறான் ?

ஜமாலின் வீடு எங்கு அமைந்துள்ளது ?

ஜமாலின் சுற்றுப்புறத்தை வரைபடமாக வரை.

மேரி

நாங்கள் எங்கள் அத்தையுடன் வாழ்கிறோம். எங்கள் வீடு தாம்பரத்தில் உள்ளது. எங்கள் அடுக்கு மாடி குடியிருப்பில் 40 குடும்பங்கள் உள்ளன. எனது பெற்றோரின் வேலை பள்ளி செல்லாக் குழந்தைகளைக் கண்டறிந்து பள்ளியில் சேர்ப்பது. அவர்கள் அதிக நாள் வெளியூர் செல்ல வேண்டியுள்ளது. எனவே நாங்கள் எங்கள் அத்தையுடன் தங்கியுள்ளோம். எங்கள் குடியிருப்பைச் சேர்ந்த குழந்தைகள் அனைவரும் மாலையில் சேர்ந்து விளையாடுவோம். ஆனால் நாங்கள் வேறு வேறு பள்ளிகளில் படிக்கிறோம். மேரிக்கு வண்டலூர் விலங்கியல் பூங்கா மிகவும் பிடிக்கும், ஏனென்றால் அங்கு மரங்களும் விலங்குகளும் அதிகமாக உள்ளன.

ஜான்

ஜான், மேரியின் வீடு எங்குள்ளது ?

அவர்கள் ஏன் அத்தையுடன் வசிக்கின்றனர் ?

மேரிக்கு ஏன் வண்டலூர் பூங்காவை மிகவும் பிடிக்கும் ?

நீ வாழும் பகுதி இவர்களில் யாருடையதைப் போன்றது ?

அவர்கள் கூறுவதைப் போல் நீ வாழும் பகுதியைப் பற்றி உன்னால் எழுத முடியுமா ? ஆசிரியர் உதவியுடன் எழுது.

படத்தைப் பார். நீ எவ்வாறு நடந்து கொண்டால் உன் அக்கம்பக்கத்து வீட்டுக்காரர்களுக்கு உன்னைப் பிடிக்கும் ?

உன் வீட்டிற்கு அருகில் வசிப்பவர்களில் உனக்குப் பிடித்தவர்கள் யார் ? யார் ? ஏன் பிடிக்கும் ? அவர்கள், எல்லோரிடமும் எப்படிப் பழகுகின்றனர் ?

உன் வீட்டில் / அக்கம் பக்கத்தில் உள்ள முதியவர்களிடம் கேட்டு விடையை எழுது.

கேட்க வேண்டிய கேள்வி	உன் வீட்டில்	உன் நண்பனின் வீட்டில்
எத்தனை வருடங்களாக இப்பகுதியில் வசிக்கிறீர்கள் ?		
உங்கள் வீட்டிற்கு அருகில் உங்களுக்குப் பிடித்த இடங்கள் இரண்டு		
உங்கள் பகுதியில் இல்லாத, ஆனால் அவசியம் தேவை என நீங்கள் நினைக்கும் வசதிகள்		

எனது பள்ளியில்................

நம் வீட்டிற்கு அடுத்து நாம் அதிக நேரம் இருக்கும் இடம் பள்ளி. அதனால் ஆசிரியர்களுடனும், சக மாணவர்களுடனும் நன்கு பழக வாய்ப்பு ஏற்படுகிறது. எனவே பள்ளியையும் ஒரு குடும்பம் எனலாம்.

பள்ளியின் அனைத்து அலுவல்களும் தலைமை ஆசிரியரின் மேற்பார்வையில் நடைபெறுகின்றன. இங்குள்ள ஆசிரியர்கள் நமக்குப் பாடங்களை அன்புடனும், பொறுமையுடனும் கற்றுத் தருகின்றனர். நல்ல நடத்தை, மற்றவர்களுடன் கலந்து பழகுதல், தனித்திறன்கள் போன்றவற்றையும் வளர்க்க உதவுகின்றனர்.

பெரிய பள்ளிகளில், அலுவலர்கள் பள்ளிப் பதிவேடுகளைப் பராமரிக்கின்றனர். அரசுப் பள்ளிகளில் குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்குவதை சத்துணவு அமைப்பாளர் கவனித்துக் கொள்கின்றார். பள்ளியின் அலுவலக உதவியாளரும், காவலாளியும் நாம் பள்ளியில் பாதுகாப்பாகப் படிக்க உதவுகின்றனர்.



இது போல் உன் பள்ளியில் நீங்கள் பின்பற்றும் செயல்கள் எவை ? அவற்றில் நீ பின்பற்ற வேண்டிய முக்கியமான செயல் என எதை நினைக்கிறாய் ? ஏன் ?

இந்த அறிவிப்புப் பலகைகளில் உள்ள வாசகங்களைப் பார். இவை எதற்காக வைக்கப்பட்டுள்ளன ? இவற்றால் ஏற்படும் நன்மைகள் என்ன ? இவற்றைப் பின்பற்றாமல் போனால் ஏற்படும் விளைவுகள் என்ன ?



எச்சில் துப்பினால் சுற்றுப்புறம் அசுத்தமாகும். நோய் பரவும்.

நீ உன் பள்ளியில் இருந்து கற்றவை....

3. பள்ளிக்கு வரும் வழியில்...

நாம் தினமும் பள்ளிக்கு வரும் வழியில் பல வகையான மரங்கள், வண்ண வண்ணப் பறவைகள், வகை வகையான வாகனங்கள், வித விதமான ஓசைகள், பழக்கமான மனிதர்கள், பல்வேறு காட்சிகள் முதலியவற்றைக் கடந்து வருகிறோம். இவற்றின் மூலம் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அனுபவத்தைப் பெறுகிறோம்.

இவை மீனா பள்ளிக்கு வரும் வழியில் பார்த்த காட்சிகள். இதைப் போல நீ பள்ளிக்கு வரும் வழியில் என்னென்ன பார்த்திருக்கிறாய் ? அவை, கீழ் உள்ள படங்களில் இருந்தால் அப்படத்தை வட்டமிடு.

நீ பள்ளிக்கு வரும் வழியில் காணும் ஒரு காட்சியைப் படமாக வரை.

தன் வசிப்பிடத்திற்கான வழியைப் பிற உயிரினங்கள் எப்படி அறிகின்றன எனப் பார்ப்போமா?

இரை தேடிச் செல்லும் பறவை, மீண்டும் தன் கூட்டிற்கு எப்படித் திரும்பிச் செல்லும் ?
ஒரு வேளை அது காற்றின் வழியாகத் தன் பாதையை அமைத்திருக்குமோ!



மரம் விட்டு மரம் தாவும் குரங்கு தன் உணவைக் காட்டில் எப்படித் தேடும் ?
மரங்களே அதற்குச் சாலையாகத் தெரியுமோ!



நீரில் வாழும் மீன்கள், கூட்டமாக ஒரே திசையில் செல்வது எப்படி ? நீரில் அதற்கான பாதை அமைக்கப்பட்டிருக்குமோ!



நீ வீட்டில் இருந்து பள்ளிக்கு சென்று வரும் வழியை எவ்வாறு அறிவாய் ? நாம் செல்லும் வழியில் கோயில்கள், மருத்துவமனை, சந்தை, அஞ்சலகம், காவல் நிலையம், பேருந்து நிலையம், தொடர் வண்டி நிலையம் போன்ற பல இட அடையாளங்கள் உள்ளன.

இந்த அடையாளங்கள், நாள்தோறும் நாம் சென்று வரும் பொழுது நம் மனதில் நன்கு பதிந்து விடுகின்றன. இதனால், நம் வீட்டில் இருந்து பள்ளி போன்ற பல இடங்களுக்கு நம்மால் எளிதில் சென்று வர முடிகிறது. நாம் ஓர் ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குச் செல்வதற்குச் சாலைகள் பயன்படுகின்றன.

கிராமங்களில் ஒற்றையடிப் பாதைகள் உள்ளன. தார்ச் சாலைகள் கிராமங்களை நகரங்களுடன் இணைக்கின்றன. சாலைகள் மக்களின் போக்குவரத்திற்கும், அவர்கள் உற்பத்தி செய்த பொருள்களைக் கொண்டு செல்லவும் பயன்படுகின்றன. சாலைகளில் எப்பொழுதும் போக்குவரத்து மிகுந்து காணப்படுகிறது. நாம் சாலையில் நடக்கும் பொழுது சாலையின் ஓரமாகவும், நடைபாதையைப் பயன்படுத்தியும் நடக்க வேண்டும்.

பெரிய நகரங்களில், சாலையைக் கடப்பதற்குப் பாலங்களும், சுரங்கப் பாதைகளும் அமைக்கப்பட்டுள்ளன. சாலையில் பாதசாரிகள் (நடந்து செல்பவர்கள்) சாலையைக் கடக்கும் இடமும் அமைக்கப்பட்டிருக்கும்.

பள்ளிக்கு வரும் வழியில் அறிமுகமற்ற மனிதர்களிடம் பேசக்கூடாது. அவர்கள் தரும் பரிசுகளையோ, உணவுப் பொருள்களையோ வாங்கக்கூடாது.

உன்னுடைய நண்பர்கள் உன் வீட்டிற்கு வர நீ சில அடையாளங்கள் சொல்வாய் அல்லவா? இன்னும் எளிதாக வழி கூற உன் முகவரி உதவும்.

உனக்கு உன் வீட்டின் முகவரி தெரியுமா?

பெயர்: ______________________________

தந்தை பெயர்: ______________________________

வீட்டு எண்: ________ தெருவின் பெயர் : ____________________

ஊர்: ________________ மாவட்டம் : ________________

மாநிலம் : ______________________________

அஞ்சல் குறியீட்டு எண் : ______________________



உன் வீட்டிற்குக் கடிதங்கள் வந்து சேரவும் முகவரி தேவை. உன் முகவரியை எப்பொழுதும் மறக்கக்கூடாது. உனக்கு வீட்டிற்கு வழி தெரியாத சமயங்களில் முகவரி கை கொடுக்கும்.

நம் வீட்டை மற்றவர்கள் எளிதில் அடையும் வகையில் அடைமொழியுடன் வழி கூறுவோமா ?

பச்சைவண்ண மாடி வீடு, பெரிய ஆல மரம், அதன் அருகில் உள்ள புது வீடு, மல்லிகைச் செடி உள்ள வீடு. இருப்புப்பாதைக்கு அருகில் உள்ள வீடு. ரோஜா செடி நிறைய உள்ள வீடு. இன்னும் பல வகைகளில் அடைமொழியுடன் நீ வசிக்கும் வீடு எங்குள்ளது எனக் கூறமுடியும் அல்லவா ? வீடு என்பது நமக்குப் பார்க்க, கேட்க, பழக, உணர பல அனுபவங்களைத் தருகிறது.



இது போல உனக்குப் பிடித்த வகையில் உன் வீட்டிற்கு வழி கூற முயன்று பார்.

இடங்களை அறிய இன்னொரு எளிய வழி, வலப்பக்கம் மற்றும் இடப்பக்கங்களை அறிதல். ஓர் எளிய விளையாட்டு. உன் நண்பர்களுடன் விளையாடு. இதன் பெயர்,

‘கண்ணாடி முன்னாடி’

நீயும், உன் நண்பனும் நேருக்கு நேராக ஒருவரை ஒருவர் பார்த்து நில்லுங்கள். நீ உன் நண்பனையும், உன் நண்பன் உன்னையும் முகம் பார்க்கும் கண்ணாடியாக நினைத்துக் கொள்ளவும்.

நீ வலது கையைத் தூக்கு. உன் நண்பன் எந்தக் கையைத் தூக்க வேண்டும்? ________________________________

நீ உன் இடது காதைத் தொடு, உன் நண்பன் எந்தக் காதைத் தொட வேண்டும்? ________________________

இந்த விளையாட்டைத் தொடர்ந்து விளையாடுங்கள்.

நீ வீட்டை விட்டு அதிகம் வெளியில் செல்வது பள்ளிக்குத் தான். உனக்கு பள்ளியின் முகவரி தெரியுமா ?

பள்ளியின் பெயர் : ______________________________

தெரு: ______________________________

ஊர்: ______________ மாவட்டம் : ______________

மாநிலம் : ______________ அஞ்சல் குறியீட்டு எண் : ______________

உன்னைப்போல் கலை மூன்றாம் வகுப்பில் படிக்கிறாள். தினமும் தனது தோழிகள் ஆயிஷா, மேகலாவுடன் பள்ளிக்குச் செல்வாள். அன்று மழை தூறிக்கொண்டிருந்தது. அவள் குடை பிடித்துக்கொண்டு சென்றாள். அவர்கள் குளத்துக்கு அருகில் செல்லும் போது கொரக்...

கொரக்...... கொரக்......எனத் தவளை கத்தியது.

குளக்கரையில் கொக்கு ஒன்றைப் பார்த்தனர்.

கலை தவளை போல் தாவிக் காட்டினாள். மேகலா கைகளைத் தூக்கிக் கொக்கு போல் பறக்க முயன்றாள். “நான் இந்தப் பறவையை எங்கள் தோட்டத்தில் பார்த்தேன்” என்றாள் கலை. “தவளை போலத் தாவுவதை நிறுத்து. நீ நனைந்து விட்டாய்”, என்றாள் ஆயிஷா. மழை நின்று சூரியன் தெரிந்தது.

அவர்களது நிழல் அவர்களுக்கு முன் விழுந்தது. “நான் உன் நிழலைத் தொட்டுவிட்டேன். நீ, என் நிழலைத் தொடு பார்க்கலாம் ?” என்றாள் ஆயிஷா. அவர்கள் குதித்தும், ஓடியும் ஒருவர் நிழலை ஒருவர் தொட முயன்றனர்.

பள்ளி வரும் போது நீ உன் நிழலைப் பார்த்திருக்கிறாயா ?



வயலைத் தாண்டி அய்யனார் கோயில். அடுத்தது மாந்தோப்பு , தோப்பு முழுவதும் மாங்காய் காய்த்திருந்தது. “எனக்கு மாங்காய் சாப்பிடணும் போல இருக்கு” என்றாள் கலை.

தோப்புப் பக்கத்தில் ஒரு குட்டி நாயும் அவர்களுடன் சேர்ந்து கொண்டது. பேசிக் கொண்டே தார்ச் சாலையை அடைந்தனர். ஒரு பேருந்து வந்தது. குமரன் அதில்தான் தினமும் பள்ளிக்கு வருவான்.

சாலையைத் தாண்டி ஒரு பெட்டிக்கடை. அங்குதான் சாலையின் குறுக்கே வெள்ளைக்கோடு போடப்பட்டிருக்கும். சாலையின் ஓரம் காத்திருந்து வாகனம் எதுவும் வராத போது சாலையைக் கடந்தனர். மணி அடிக்கும் நேரத்தில் பள்ளிக்குள் நுழைந்தனர்.

கலை, மேகலா, ஆயிஷா பள்ளி செல்லும் வழியில் பார்த்தவற்றைப் பட்டியலிடு.

_______________ _______________

_______________ _______________

_______________ _______________

கலையைப் போல் கனி பள்ளிக்குச் செல்லும் வழியை வரைபடமாக வரைந்துள்ளாள். வரைபடத்தைப் பார்த்துத் தெரிந்து கொள்.


கனியின் வரைபடம்
கனியின் வீடு
இருப்புப் பாதை
வ
மே
கி
தெ
தண்ணீர் தொட்டி
தேவாலயம்
கடை
கடை
ரவி வீடு
கிணறு
கலையின் வீடு
கபீரின்
வீடு
வீடு
கோயில்
வீடு
கடை
மசூதி
கடை
பூங்கா
பள்ளி
மைதானம்

☞ கனி வீட்டிலிருந்து பள்ளிக்கு வரும் வழியை வண்ணக் கோடிட்டுக் காட்டு.

☞ ரவிக்குப் பள்ளி செல்ல இரண்டு வெவ்வேறு வழிகளைக் கோடிட்டுக் காட்டு.

☞ கபீர் வீட்டிலிருந்து பள்ளிக்கு வரும் வழியில் அவனுக்கு இடப்பக்கம் உள்ளவை

____

☞ கனி பள்ளிக்குச் செல்ல எத்தனைத் திருப்பங்களைக் கடக்க வேண்டும் ?

☞ படத்திலிருந்து ஒரு வீட்டைத் தேர்ந்தெடு. அதன் அருகில் உன் பெயரை எழுது.

☞ படத்திலுள்ள உனது வீட்டிலிருந்து பள்ளிக்கு வரும் வழியை அம்புக் குறியிட்டுக் காட்டு. வேறு ஒரு மாற்று வழியையும் காட்டு.

மாணவர்கள் நான்கு குழுக்களாகப் பிரிந்து கொள்ளுங்கள். ஒவ்வொரு குழுவும் வரைபடத்தைப் பார்த்து இது போல் மேலும் பல கேள்விகளை நீங்களே உருவாக்குங்கள். ஒரு குழு உருவாக்கிய கேள்விக்கு மற்ற குழுக்கள் விடை கண்டறியுங்கள்.

உன் பள்ளி உன் வீட்டிற்கு அருகிலா? தொலைவிலா? அருகில், தொலைவில் என்பதை எவ்வாறு அறிந்து கொள்வாய்? கூறு.

நீ பள்ளிக்கு வரும் பொழுது பார்ப்பவை

☞ வலப்பக்கம் ______________________________

____

☞ இடப்பக்கம் ______________________________

____

தினமும் உன்னுடன் சேர்ந்து பள்ளிக்கு வருபவர்கள் யார், யார்?

❖ ______________________________

❖ ______________________________

❖ ______________________________

உன் பள்ளியில் படிக்கும் நண்பர்கள் யாரேனும் உன் வீட்டிற்கு அருகில் உள்ளார்களா? பெயர்களை எழுது. ______________________

பள்ளிக்குச் செல்லும் பொழுது நீ பார்த்த, மறக்க முடியாத நிகழ்ச்சி ஒன்றைக் கூறு.

உன் ஊரில் உள்ள நீர் நிலைகளை ✓ செய்.

ஆறு ☐ குளம் ☐ ஏரி ☐ கைஅடிக்குழாய் ☐

குழாய் ☐ கிணறு ☐ நீர் நிலை எதுவும் இல்லை ☐

வீட்டிற்கு வெளியில் செல்லும்போது வானிலையைக் கவனித்து இருக்கிறாயா? இன்று வானிலை எவ்வாறு இருந்தது? ✓ செய்.

தேதி	வெப்பம்	மித வெப்பம்	காற்று	மேக மூட்டம்	மழை	குளிர்
நேற்று						
இன்று						

பள்ளி செல்லும் வழியில் என்னென்ன வேலை செய்பவர்களை நீ பார்க்கிறாய்?

____

____

____

____

நீ வழியில் பார்க்கும் காட்சிகளைப் பட்டியலிடு.

கட்டடங்கள்	மரங்கள்	விலங்குகள்	பொருள்கள்
அஞ்சலகம்	வேப்ப மரம்	நாய்	குப்பைத் தொட்டி



யோசி! யோசி!! செய்.

இரண்டு நாட்கள் நீ பள்ளிக்குச் செல்லும் பாதையைக் கூர்ந்து கவனிக்கவும். வழியில் காணும் சில இடங்களுக்கான குறியீடுகள் கொடுக்கப்பட்டுள்ளன.



இது போல் மற்ற இடங்களுக்கான குறியீடுகளை நீயே உருவாக்கிக் கொள்.

வரைபடத்தை வரையலாமா ?

எனது பள்ளிக்குச் செல்லும் வழி. நானே வரைந்த வரைபடம்.



4. திசைகளை அறிவோம்...

கவிதா, மலர் இருவரும் ஒரே பள்ளியில் படிக்கின்றனர். தாங்கள் வீட்டிலிருந்து பள்ளிக்குச் செல்ல எந்தப்பக்கம் திரும்ப வேண்டும் என்பதில் இருவருக்கும் விவாதம். கவிதா "நாம் இடப்பக்கம் திரும்பவேண்டும்" என்றாள். மலர் "இல்லை, இல்லை. வலப்பக்கம் தான்" என்றாள். பள்ளி செல்லும் வரை விவாதம் நீண்டது.

இருவரும் ஆசிரியரின் வருகைக்காக ஆவலுடன் காத்திருந்தனர். ஆசிரியர் வகுப்பறைக்குள் நுழைந்தவுடன் அவரிடம் ஓடினர். "டீச்சர், பள்ளிக்கு என் வீட்டிலிருந்து எந்தப் பக்கம் திரும்பி வர வேண்டும்? இடப்பக்கம் தானே?" என்றாள் கவிதா. "இல்லை, வலப்பக்கம் தான்" என்றாள் மலர். ஆசிரியர் சிரித்துக்கொண்டே, "இருவர் கூறுவதும் சரி" என்றார். ஆசிரியர் ஏன் அவ்வாறு கூறினார்? உன்னால் கண்டு பிடிக்க முடிகிறதா?

கவிதாவும், மலரும் எதிர் எதிர் வீட்டில் வசிக்கின்றனர். கவிதா வீட்டின் வெளியே வந்து இடப்பக்கம் திரும்பி பள்ளி செல்ல வேண்டும். மலர் தன் வீட்டின் வெளியே வந்து வலப் பக்கம் திரும்ப வேண்டும். வரைபடத்தில் கவிதா வீடு எது? மலர் வீடு எது? கண்டுபிடியுங்கள். பெயர் எழுதுங்கள்.

ஒரு விளையாட்டு விளையாடலாமா ?

எல்லோரும் இருக்கும் இடத்திலேயே எழுந்து நில்லுங்கள். வகுப்பில் உனக்கு முன்னால் உள்ளது என்ன / யார் ? ____________________

இப்பொழுது உன் இடப்பக்கம் திரும்பு.

அங்கு உள்ளது ____________________

மீண்டும் இடப்பக்கம் திரும்பு.

நீ இப்பொழுது பார்ப்பது ____________________

மறுபடியும் இடப்பக்கம் திரும்பு.

அங்குள்ளது ____________________

மீண்டும் இடப்பக்கம் திரும்பு.

அங்கு ____________________



இப்பொழுது நீ இருக்கும் இடத்திலேயே உன்னை ஒரு சுற்றுச் சுற்றி இருப்பாய். இதைப் போலவே வலப்பக்கமும் செய்து பார்.

ஆசிரியருக்கு:

மாணவர்கள் ஒவ்வொரு முறை இடது புறம் திரும்பும் பொழுதும் பார்க்கும் பொருள் அல்லது நபர்களை உற்று நோக்கி நினைவில் கொள்ளச் செய்யவும். பின்னர் புத்தகத்தில் அதற்குரிய இடத்தில் எழுதச் செய்யவும்.

ஓர் இடம் எங்கு உள்ளது, அதை எப்படிச் சென்றடைவது என்பதை அறிய திசைகளும் வரைபடங்களும் உதவுகின்றன. உங்கள் ஊரில் உள்ள இடங்களுக்கு யாரேனும் வழி கேட்டால், உங்களால் உதவ முடியுமா? திசைகளை அறிந்தால் வழி கூறுவது எளிது. எங்கு சென்றாலும் திசைகளைப் பற்றி அறிந்திருக்க வேண்டும்.

நீங்கள் திசைகளை அறிந்து கொள்ள . . . காலையில் சூரியனைப் பார்த்து நில்லுங்கள். இரண்டு கைகளையும் பக்கவாட்டில் நீட்டுங்கள்.



சூரியன் உதிப்பது கிழக்கு,

அதன் எதிர்புறம் இருப்பது மேற்கு,

வலக்கைப் பக்கம் தெற்கு,

வாதம் வேண்டாம் இதற்கு,

இடக்கைப் பக்கம் வடக்கு,

போதும் கையை மடக்கு.

நாம் செல்லும் இடத்திற்கேற்பத் திசையை அறிய இவை உதவுகின்றன.

நான்கு திசைகளை ஆசிரியர் கூறியவுடன் கவிதா, “டீச்சர், மலர் பள்ளிக்கு வர வலப்பக்கம் திரும்பினாள், நான் இடப்பக்கம் திரும்பினேன். இடத்திற்கு இடம் மனிதர்களுக்கு மனிதர் திசைகள் வேறுபடுமா?” எனக்கேட்டாள்.

ஆசிரியர் சிரித்துக்கொண்டே சில படங்களைக் காட்டினார். சூரியனை மையமாகக் கொண்டு அப்பு கண்டறிந்த திசைகளைப் படத்தைப் பார்த்து நீங்களும் குறியுங்கள்.

அப்புவுக்கு திசையைக் கூறு.



கவிதாவிற்கு இப்பொழுது தான் திசைகளைப் பற்றிப் புரிந்தது. “நானும் மலரும் பள்ளிக்கு வரும் திசை வடக்கு” என்றாள் கவிதா. மலரும் கவிதாவும் வீட்டிலிருந்து பள்ளிக்கு வடக்குத் திசையில் செல்கின்றனர். வீட்டிலிருந்து கவிதா இடப்புறம் திரும்புகிறாள். மலர் வலப்புறம் திரும்புகிறாள். அப்படி எனில் அவர்கள் வீடு சாலைக்கு எந்தத் திசையில் உள்ளது ?

கவிதா வீடு சாலைக்கு ____________________ திசையில் உள்ளது.

மலர் வீடு சாலைக்கு ____________________ திசையில் உள்ளது.



எப்பொழுதும் வரைபடம் வரையும் பொழுது குறிப்பேட்டின் மேல் பகுதியை வடக்குத் திசையாகக் கொள்.

குறிப்பைப் படித்துப் பெயர்ப் பலகையை எழுது.



படத்தில் உள்ள வீட்டின் மேல் உன் விரலை வை.

- வீட்டிலிருந்து நேராக வடக்கு நோக்கி விரலை நகர்த்து. சந்தையை அடைவாய்.
- வீட்டிலிருந்து மேற்கு நோக்கி விரலை நகர்த்து. தொடர்ந்து வடக்கு நோக்கிச்செல். அதுதான் பூங்கா.
- வீட்டிலிருந்து கிழக்கு நோக்கிச் செல். தொடர்ந்து தெற்கு நோக்கிச்செல். இறுதியில் வருவது தென்னந்தோப்பு.
- வீட்டிலிருந்து நேராகத் தெற்கு நோக்கிச் செல். அங்கிருப்பது விளையாட்டு மைதானம்.
- விளையாட்டு மைதானத்திலிருந்து கிழக்கே சென்றால் பள்ளி வரும்.
- விளையாட்டு மைதானத்திற்கு மேற்கே உள்ளது பொருட்காட்சி.

திசைகாட்டும் கருவி

நிலத்திலேயே நம்மால் சில வேளைகளில் திசைகளை அறிய முடிவதில்லை. நான்கு புறமும் நீராக இருக்கும் கடலை நினைத்துப் பாருங்கள். கடலில் பயணம் செல்வோர் எப்படித் திசைகளை அறிந்து கொள்கிறார்கள்? அதற்குப் பயன்படுவதுதான் திசை காட்டும் கருவி. இதன் காந்த முள் எப்பொழுதும் வடக்கு நோக்கியே இருக்கும். இதுவே, கடல் பயணம் செல்வோர் திசைகளை எளிதில் அறிய உதவுகிறது.

திசைகளை அறிய சூரியன் எவ்விதம் உதவுகிறது?

நான்கு முக்கிய திசைகள் எவை?

வாழிடம் தேடி...

மாயனூர் என்று ஒரு சிறிய கிராமம். அந்த ஊரின் வடக்குப் பக்கத்தில் ஒரு வயல். வயலுக்குக் கிழக்கே ஒரு சிறிய குளம். அந்தக் குளத்தின் கரையில் பல பறவைகள் குடும்பத்தோடு வாழ்ந்து வந்தன. அவற்றில் வாத்து, கொக்கு, மீன்கொத்தி, மரங்கொத்தி, காகம் ஆகியவை நண்பர்கள்.

கோடைக்காலம் வந்தது. குளம் வற்றத் தொடங்கியது. எல்லாப் பறவைகளும் கூடின. குளத்தில் தண்ணீர் வற்றி விட்டதே, இனி என்ன செய்வது? என்று யோசித்தன.

“மாயனூருக்குத் தெற்கில் ஒரு குளம் உள்ளது, அது எப்பொழுதும் வற்றாது. நாம் அங்கே செல்வோம்,” என வாத்து கூறியது.

“ஐயோ! அங்கு வேண்டாம். அங்கே மரமோ, வயலோ கிடையாது. மனிதர்கள் மட்டுமே இருப்பர்” என்றது காகம்.

“முன்பு ஒரு முறை நான் பறந்து வரும்போது ஓர் ஆறு ஓடுவதைப் பார்த்தேன். என் நண்பர்களுடன் போய் அது எங்கிருக்கிறது எனக் கண்டுபிடித்து வருகிறேன். பிறகு நாம் அங்கு சென்று வசிப்போம்” எனக் கூறியது கொக்கு.

கொக்கு அதன் நண்பர்களுடன் மாயனூரின் கிழக்குப் பகுதி நோக்கிப் பறந்தது. அங்கு ஓர் ஏரியும் அதன் அருகில் வாகன நெரிசல் மிகுந்த சாலை மற்றும் கட்டிடங்களைப் பார்த்தன. பின் அங்கிருந்து மாயனூரின் மேற்குப் பக்கம் நோக்கிப் பறந்தன. மேற்குத் திசையில் செல்லச் செல்ல ஒரு அழகான பெரிய ஆறு ஓடுவதைப் பார்த்தன. அதன் அருகில் பச்சைப் பசேலென வயல் வெளியும், அடர்ந்த மரங்களும் இருக்கக் கண்டு, மகிழ்ச்சி அடைந்தன.

மற்ற பறவைகளிடம் தாங்கள் கண்டுபிடித்த இடத்தைப் பற்றிக் கூறின. அனைத்து பறவைகளும் அந்த ஆற்றுப் பகுதிக்கு தங்கள் இருப்பிடத்தை மாற்றிக் கொண்டன. தண்ணீர் பஞ்சமின்றி மகிழ்ச்சியுடன் வாழ்ந்தன.

வரைபடத்தில், பறவைகள் தேடிய நீர் நிலைகளையும் அதன் திசைகளையும் கண்டுபிடித்து வரைக.



பக்கம் 21ல் இருக்கும் படத்தைப் பார்.

- கனி, பள்ளிக்கு வரும் திசையைக் கூறு.
- ஆற்றுக்கு மேற்கில் என்ன உள்ளது ?
- கோயிலுக்கு ________________ திசையில் கபீரின் வீடு உள்ளது.
- தேவாலயத்திற்கு ________________ திசையில் இருப்பது இருப்புப்பாதை.

5. பார்த்து நடக்க வேண்டும்

இரவில் மழை பெய்திருந்தது. காலையில் பள்ளியின் ஈர மைதானத்தில் குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தனர்.

சில குழந்தைகள் மண்ணில் கோடுகள் போட்டு பாம்...பாம்... என வாகனம் போல ஒலி எழுப்பி ஓடிக்கொண்டிருந்தனர்.

அப்துல் ஆசிரியரை அழைத்து வந்து அக்கோடுகளைக் காட்டினான். "சாலை போலவே இருக்கிறது பாருங்கள்" என்றான். "மண்ணில் விளையாடியது போதும். எல்லோரும் போய் கைகால்களைக் கழுவிக்கொண்டு வகுப்பிற்கு வாருங்கள்" என்றார் ஆசிரியர்.

வகுப்பிற்குள் நுழைந்த குழந்தைகளை "என்ன விளையாடினீர்கள் ?" எனக் கேட்டார். "வாகனங்கள் ஓட்டினோம்" என்றனர் ஒரே குரலில். "என்னென்ன வாகனங்களை ஓட்டினீர்கள் ?" என்றார் ஆசிரியர். "பேருந்து, கார், ஆட்டோ, இரயில், மோட்டார் சைக்கிள்" என்றாள் விஜி.

"ஒரே நெரிசல், வண்டி சத்தம். சூரியாவும், ராமுவும் எல்லோர் மேலேயும் தரையில் இருந்து தண்ணீரை அடித்து விட்டார்கள்" என்றான் அகிலன்.

“அதனால் என் சட்டை மண்கறை ஆயிற்று. ராமுவும் ஐசக்கும் மோதி கீழே விழுந்து விட்டார்கள்” என்றாள் சீதா.

“நான் திரும்ப நினைத்தேன். ஆனால் ஐசக் கைகளை நீட்டிக்கொண்டு ஓடிவந்ததால் கீழே விழுந்துவிட்டேன்” என்றான் ராமு.

“எல்லோரும் வாகனத்தில் தான் சென்றீர்களா ? யாரும் நடந்து போகவில்லையா ?” எனக் கேட்டார் ஆசிரியர்.

“நடக்க இடமே இல்லை. யாரும் யாரையும் கவனிக்கவில்லை. அவரவர் போக்கில் ஓடினர்”. என்றான் கண்ணன்.

“இப்படித்தான் சாலையிலேயும் நடக்கிறது. அதனால் நாம் சாலையில் கவனமாகச் செல்ல வேண்டும். சாலையில் போக்குவரத்துக்கு எனச் சில விதிகள் உள்ளன. அவற்றைப் பார்ப்போமா ?

இன்று நீங்கள் விளையாடியதில் இருந்தே தொடங்குவோம். நடந்து செல்பவர்களுக்கான சாலை விதிகள் என்ன ? யாருக்காவது தெரியுமா ?” எனக் கேட்டார் ஆசிரியர்.

“நடைபாதையைப் பயன்படுத்த வேண்டும்” என்றாள் சுசீலா.

“ஆனால், என் வீட்டிற்கு அருகில் நடைபாதையே இல்லையே” என்றாள் மீனா.

“ நடைபாதை இல்லாத இடங்களில் சாலையின் ஓரத்தில் நடக்க வேண்டும்” என விளக்கினார் ஆசிரியர்.

“ நாம் சாலையில் ஓடக்கூடாது, விளையாடக்கூடாது” என்றான் ஐசக்.

“ பள்ளிக்கு வரும்போது சாலையின் மறுபக்கம் உள்ளவர்களுடன் பேசுவேன். இனி அவ்வாறு செய்யமாட்டேன்” என்றாள் வசந்தி.

“ அது மற்றவர்களுக்குக் கவனச் சிதறலை ஏற்படுத்தும் ” என்றார் ஆசிரியர்.

“ நான் இருப்புப்பாதையைக் கடந்து பள்ளிக்கு வருகிறேன் ” என்றான் கண்ணன்.

“ இருப்புப்பாதையைக் கடக்கும் போது மிக கவனமாக இருக்கவேண்டும். ஒரு போதும் இருப்புப்பாதையின் மீது நடக்கக் கூடாது. எச்சரிக்கை விளக்கு போட்டவுடன் எக்காரணத்தைக் கொண்டும் பாதையைக் கடக்க முயலக்கூடாது” என்று அறிவுறுத்தினார் ஆசிரியர்.



“அப்பப்பா, ஏகப்பட்ட விதிகள், எப்படி நினைவில் வைத்துக்கொள்வது ?” என்றான் கவின்.

“நான் கேட்கும் கேள்விகளுக்கு சரியா ? தவறா ? என்று மட்டும் பதில் சொல்லுங்கள், பார்ப்போம் ? ” என்றார் ஆசிரியர்.

மாணவர்கள் என்ன விடை கூறியிருப்பர்?

சரி எனில் சிரிக்கும் முகத்திற்கும்,

தவறு எனில் வருந்தும் முகத்திற்கும், வண்ணமிடு.

நடை பாதையில் நடத்தல் 

நடைபாதை இல்லாத இடங்களில், சாலையின் ஓரமாக நடத்தல்

சாலையின் குறுக்கே ஓடுதல்

சாலைக்கு அருகில் அல்லது சாலையில் விளையாடுதல் 

சாலையில் நடக்கும் பொழுது கைபேசியில் பேசாதிருத்தல்

சாலையில் விளம்பரப் பலகைகளை வேடிக்கைப் பார்த்துக் கொண்டு நடத்தல்

இருப்புப் பாதையின் மீது நடத்தல்

இருப்புப் பாதையைக் கடக்க எச்சரிக்கை விளக்குகளைக் கவனித்தல்

“ஆமாம்! உண்மையாகவே, விதியை நினைவில் வைத்துக் கொள்வது ஒன்றும் கடினம் இல்லை”, சிரித்தான் கவின்.



அடுத்த நாள் ஆசிரியர் போக்குவரத்துக் காவலரை வகுப்பிற்கு அழைத்து வந்தார். அவரிடம் “சாலையைப் பாதுகாப்பாகக் கடப்பது எப்படி ?” எனக் கேட்டாள் மீனா. காவலர் தான் கொண்டு வந்திருந்த சாலை பாதுகாப்பு விதிகளுக்கான படத்தொகுப்பைக் காட்டி அதற்குரிய விளக்கமளித்தார்.

படத்தொகுப்பும் அதற்குரிய விளக்கங்களும்

நகரங்களில் நடைபாதையில் நடக்க வேண்டும். நடைபாதை இல்லாத இடங்களில் சாலை ஓரங்களில் நடக்க வேண்டும்.

வாகனங்களுக்கான எச்சரிக்கை விளக்கு.

→ சிவப்பு — நில்

→ மஞ்சள் — கவனி

→ பச்சை — செல்

பாதசாரிகளுக்கான எச்சரிக்கை விளக்கு.

நில் — சிவப்பு ←

செல் — பச்சை ←

இவை நகரங்களில், கூட்டம் மிகுந்த சாலை சந்திப்புகளில் வைக்கப்பட்டிருக்கும். இதைக் கவனித்தே பாதசாரிகள் சாலையைக் கடக்க வேண்டும்.

பாதசாரிகளுக்கான பச்சை விளக்கு ஒளிர்ந்ததும் சாலையைக் கடக்க வேண்டும். சாலையை அதன் குறுக்கே போடப்பட்டுள்ள வெள்ளைக் கோட்டின் மேல் தான் கடக்க வேண்டும்.

எச்சரிக்கை விளக்கு இல்லாத இடங்களில் சாலையின் குறுக்கே கடக்கும் பொழுது இருபுறமும் பார்க்க வேண்டும். முதலில் வலதுபுறமும், பின் இடதுபுறமும் பார்க்க வேண்டும். வாகனங்கள் எதுவும் வராத பொழுது சாலையைக் கடக்க வேண்டும்.

வண்டியை ஓட்டுபவர்கள் சிறிய சாலையிலிருந்து முக்கிய சாலை சந்திப்பிற்கு வரும் பொழுது வண்டியின் வேகத்தைக் குறைக்க வேண்டும். முக்கிய சாலையில் செல்லும் வாகனங்களுக்கு வழி விடவேண்டும்.

சாலையில் பாதுகாப்பாகச் செல்ல சில எச்சரிக்கைக் குறியீடுகள்.

பாதுகாக்கப்பட்ட இருப்புப்பாதை

பாதுகாக்கப்படாத இருப்புப் பாதை

பள்ளி உள்ளது

வேகத் தடை

பள்ளம் உள்ளது

இடப்பக்க வளைவு

வலப்பக்க வளைவு

பேருந்து நிலையம்

ஒலி எழுப்பாதே

இது போன்று இடைக்கோடு போடப்பட்டிருப்பின் அதைச் செய்யக்கூடாது என்று பொருள்.

ஓட்டுநர் ஏன் சத்தமிடுகிறார் ?

எது சரி ? எது தவறு ? தவறு எனில் ஏன் எனக் கூறு.



படத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்ணுக்குரியவற்றைக் கண்டறிந்து சரியான பெயருடன் பொருத்தவும்.

தெரு விளக்கு	◯	◯	பெயர்ப் பலகை
எச்சரிக்கை விளக்கு	◯	◯	பாதசாரிகள் சாலையைக் கடக்கும் கோடு
நடைபாதை	◯	◯	போக்குவரத்து காவலர்

எந்த இடத்தில் உள்ள பாதசாரிகள், தற்போது

பாதையைக் கடக்கக் கூடாது – சிவப்பு வண்ணமிடு

யார் பாதையைக் கடக்கலாம் – பச்சை வண்ணமிடு



எந்தக் குறியீடு எந்தப் பலகையில் இடம் பெற வேண்டும்?



6. பயணம் போவோமா ?

செம்பியன் வாசலையே பார்த்திருந்தான். விறகு சேகரிக்கப் போன அப்பா இன்னும் வரவில்லை. எப்பொழுதும் ஓரிரு நாட்களில் வரும் அவர் இந்த முறை போய் ஒரு வாரம் ஆகிறது. அவன் அப்பா மிகவும் எச்சரிக்கையானவர். காட்டில் புதிய வழியில் போய் ஆபத்தைத் தேடிக் கொள்ள மாட்டார்.

ஒவ்வொரு முறை திரும்பி வரும்போதும் செம்பியனுக்கு ஒரு புது கதையோடு வருவார். அவர் காட்டில் பார்த்த அழகிய விநோதமான புது விலங்கு பற்றிக் கூறுவார். செம்பியனுக்கும் அவரோடு காட்டிற்குச் செல்ல மிகுந்த ஆசை. ஆனால் அதற்குச் செம்பியன் இன்னும் பல வருடங்கள் காத்திருக்க வேண்டும் .

திடீர் என்று கட கடவென ஏதோ உருளும் சத்தம். செம்பியன் முதலில் பயந்தான். பிறகு என்னவென்று பார்க்க ஓடினான். அங்கு அவனுடைய அப்பா புதியதாக ஏதோ ஒன்றை இழுத்துக் கொண்டு வந்தார். அதுவும் கூடவே நகர்ந்து வந்தது.



செம்பியனுக்கு மகிழ்ச்சி கலந்த ஆச்சரியம். அப்பாவிடம் ஓடிச் சென்றான். உருளும் அப்பொருளை வியப்புடன் பார்த்தான். “அப்பா, இது என்ன!” எனக் கேட்டான்.

"மலையிலிருந்து கற்களும் மரக்கட்டைகளும் உருளுவதைப் பார்த்தேன், யோசனை தோன்றியது. மரத்துண்டை வட்டமாக வெட்டி இதைச் செய்தேன். எப்படி இருக்கிறது," எனக் கேட்டார்.

"மிக நன்றாக இருக்கிறது அப்பா," எனப் பெருமையுடன் கூறினான். உலகத்திலேயே என் அப்பாவைப் போல யாருமே கிடையாது எனப் பெருமிதப் பட்டான்.

இக்கதையில் வரும் செம்பியன் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவன். அவன் தந்தைதான் அந்தச் சக்கரம் பொருத்திய வண்டியை இழுத்து வந்த மனிதன்.



சக்கரம் உருவானது . . .
பயணம் எளிதானது.

ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு ஏதேனும் ஒரு காரணத்திற்காகச் செல்வது பயணம் எனப்படும். இன்று நாம் உலகம் முழுவதும் பயணம் செய்யப் பலவகையான வாகனங்கள் உள்ளன. அவற்றில் வித விதமான சக்கரங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

நீ இந்த இடங்களுக்குச் செல்ல எந்த வாகனங்களைப் பயன்படுத்துவாய் ?



உன் தாத்தா பாட்டி இதே இடங்களுக்குச் செல்ல பயன்படுத்திய வாகனங்கள் எவை ? கேட்டு எழுது.

சிறு வயதில்

____

____

____

____

இன்று

____

____

____

____

50 வருடங்களுக்கு முன் மக்கள்...

அதிகமாக பயன்படுத்திய வாகனங்கள்	மிகவும் வியந்து பார்த்த வாகனங்கள்

பயணம் செய்யப் பல வகையான வாகனங்களைப் பயன்படுத்துகிறோம். இவற்றில்

- மிக வேகமாகச் செல்லும் வாகனம் ______________________
- மிகவும் மெதுவாகச் செல்லும் வாகனம் ______________________
- உனக்கு எந்த வாகனத்தில் பயணம் செய்யப் பிடிக்கும் ? ஏன் ?

  ____

- உன் ஊரில் இல்லாத வாகனங்கள் எவை ? ______________________

பயணத்தில் பல வகை உண்டு

இன்பச் சுற்றுலா செல்லுதல்



புனிதப் பயணம் செல்லுதல்

பயணம் என்பது

படிப்பிற்காகவும் வேலைக்காகவும் செல்லுதல்

உறவினர்கள் மற்றும் நண்பர்களைச் சந்திக்கச் செல்லுதல்

போக்குவரத்து நான்கு வழிகளில் நடைபெறுகிறது.



2. இருப்புப்பாதை வழி



இந்தப் பாதையில் எந்த வாகனங்கள் செல்லும் ?

பாதைகள்	வாகனங்கள்
சாலை வழி	
இருப்புப்பாதை	
நீர் வழி	
வான் வழி	

சாலை வழி

உலகில் உள்ள பல இடங்களையும் சாலைகள் இணைக்கின்றன. மக்கள் பயணம் செய்யவும் பொருள்களை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக் கொண்டு செல்லவும் உதவுகின்றன. தினமும் போக்குவரத்திற்கு மக்கள் சாலை வழியையே பயன்படுத்துகின்றனர்.

இருப்புப்பாதை வழி

நீ தொடர்வண்டியில் பயணம் செய்திருக்கிறாயா? எந்த ஊருக்குச் சென்று இருக்கிறாய்? தொடர்வண்டிகள் இருப்புப்பாதைகளில் செல்கின்றன. தொடர்வண்டியே நில வழியில் தொலைதூரம் வசதியாகப் பயணம் செய்ய ஏற்றது. நம் நாடுதான் உலகிலேயே மிக நீண்ட இருப்புப்பாதை அமைப்பைக் கொண்டது.

நீர் வழி

உன் ஊரில் நீர்வழிப் போக்குவரத்து உள்ளதா? கப்பல், படகு, பரிசல், மோட்டார் படகு போன்றவை நீர்வழிப் போக்குவரத்து சாதனங்களாகும். கால்வாய், ஆறு, கடல் வழியாக நீர்வழிப்போக்குவரத்து நடைபெறுகிறது. கடல் கடந்து பிறநாடுகளுக்குப் பயணம் செல்லவும், மிகக் கனமான பொருள்களைக் கொண்டு செல்லவும் நீர்வழிப் போக்குவரத்து உதவுகிறது.

வான் வழி

வான் வழிப் போக்குவரத்து மிகவும் குறைந்த நேரத்தில் அதிகத் தொலைவு செல்லக்கூடியது. மற்ற போக்குவரத்தை விட செலவு அதிகம். ஆனால், அதி விரைவானது . விமானங்கள் அளவில் பெரியவை. ஹெலிகாப்டர்கள் உருவத்தில் சிறியவை. பஞ்சம் மற்றும் வெள்ள நிவாரண நேரங்களில் உணவு மற்றும் உடைகளை மக்களிடம் விரைந்து கொண்டு சேர்க்க இவை உதவுகின்றன. விமானங்கள் செல்ல முடியாத இடத்திற்கு ஹெலிகாப்டர் செல்லும்.

நீ இரண்டு நாட்கள் சுற்றுலா செல்லும் போது என்னென்ன பொருள்களைக் கொண்டு செல்வாய் ?

______________ ______________

______________ ______________

______________ ______________ ______________

சாப்பிட எந்த உணவைத் தேர்ந்தெடுப்பாய் ? ஏன் ?

____

____

____

____





கண்டுபிடி.

வாகனங்களை அவற்றின் வேகத்திற்கு ஏற்ப 1, 2 என வரிசைப்படுத்து.

ஒவ்வொரு வாகனத்திலும் எத்தனை நபர் பயணம் செய்யலாம், குறிப்பிடு.

பெட்ரோல், டீசல் போன்ற எரிபொருள்கள் இன்றி இயங்கும் வாகனங்களை வண்ணமிடு.











- ஒரே நேரத்தில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் பயணம் செய்யப் பயன்படுத்தும் வாகனங்கள் எவை ?
- குறைந்த தூரம் செல்ல நீ எந்த வாகனத்தைப் பயன்படுத்துவாய் ?
- குறைந்த செலவில் தொலைதூரம் செல்ல எந்த வாகனத்தைத் தேர்ந்தெடுப்பாய் ?
- சென்னையில் இருந்து வாணியும், ராணியும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள டெல்லி சென்றனர். வாணி மூன்று மணி நேரத்தில் டெல்லிக்குச் சென்றாள். ராணி இரண்டு நாட்கள் பயணம் செய்து டெல்லியை அடைந்தாள். அப்படி எனில் இருவரும் எந்தெந்த வாகனத்தில் பயணம் செய்திருப்பர் ? யார் குறைந்த செலவில் பயணம் செய்திருப்பர் ?
- சுற்றுப்புறத்தை மாசுபடுத்தாமல் செல்லக் கூடிய வாகனங்கள் எவை ?
- உங்கள் பள்ளியிலிருந்து சுற்றுலா செல்வதாக வைத்துக்கொள்ளுங்கள். எப்படித் திட்டமிடுவீர்கள் ? என்ன பார்க்கப் போகிறோம் ?

எந்த இடம் ? எத்தனை மாணவர்கள் ? எத்தனை நாள் ? எந்த வாகனம் ?



ஆசிரியருக்கு

மாணவர்களைக் குழுவாகப் பிரித்து, நாம் சுற்றுச் சூழலை மாசுபடுத்தாமல் பயணம் செய்ய என்னென்ன செய்யலாம் என விவாதிக்க உதவுதல் வேண்டும்.

மலைப் பகுதிகளில் பயன்படும் வாகனங்கள்.

மக்கள் பயணம் செய்யப் பயன்படுத்தாத ஆனால்,
மக்களின் அவசரத் தேவைக்கு உதவும் வாகனங்கள் உள்ளன.

காவலர் ஊர்தி

தீயணைப்பு ஊர்தி

மருத்துவ அவசர ஊர்தி

மக்களின் பிற வேலைகளுக்குப் பயன்படும் வாகனங்கள்.
பொருள்களைக் கொண்டு செல்லவும் பிற வேலைகளுக்கும் பயன்படுபவை.

நீ விடுமுறையைக் கழிக்க, சுற்றுலாவிற்கு, வெளியூர்
உறவினர் வீட்டிற்கு, விழாவிற்குச் சென்றிருக்கிறாயா ?
எந்தெந்த வாகனங்களில் சென்றாய் ? உன் பயண அனுபவத்தைக் கூறு.



படித்து மகிழ . . .

மீனா மிகவும் மகிழ்ச்சியுடன் காணப்பட்டாள். ஊரில் இருந்து மாமா வருகிறார். மீனாவின் மாமா பெயர் சேகர். அவர் இந்தியாவில் பல இடங்களைச் சுற்றிப் பார்த்துவிட்டு திரும்பி வருகிறார்.

அவர் தான் பார்த்து வந்த இடங்களின் புகைப்படங்களைக் கொண்டு வந்திருந்தார். அவர்களுடன் நாமும் அந்தப் புகைப்படங்களைப் பார்க்கலாமா ? அவர் கூறும் விளக்கத்தைக் கேட்கலாமா ?

இந்தியாவின் தென் கிழக்கில் உள்ள கடற்கரைக் கிராமம் தனுஷ்கோடி. அங்கிருந்து நான் பெரிய பட்டிணத்திற்கு ஜீப்பில் செல்லும் போது பல மீனவ கிராமங்களையும் பனை மரங்களையும் பார்த்தேன்.

சென்னைக்கு இராமேஸ்வரத்திலிருந்து தொடர்வண்டியில் சென்றேன். கடலின் மேல் கட்டப்பட்டிருந்த பாம்பன் பாலத்தின் மீது தொடர்வண்டியில் சென்றது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

சென்னையிலிருந்து என் நண்பர்களுடன் மோட்டார் பைக்கில் மாமல்லபுரம் சென்றேன். அங்கு கடற்கரைக் கோயிலையும் குகைக் கோயில்களையும் பார்த்து வியந்தேன்.

சென்னையிலிருந்து சுற்றுலா பேருந்து மூலம் ஒரிஸ்ஸாவிற்குச் சென்றேன். அங்கு கொனார்க்கில் உள்ள சூரியனார் கோயிலைப் பார்த்தேன்.

பின் அங்கிருந்து விமானம் மூலம் அஸ்ஸாமில் உள்ள கௌகாத்திக்குச் சென்றேன். இது இந்தியாவின் வட கிழக்கில் உள்ளது. அங்கு கஜீரங்கா உயிரியல் பூங்காவைப் பார்த்தேன்.

அங்கிருந்து ஹெலிகாப்டர் மூலம் மேகாலயா மாநிலத்தின் தலைநகரான ஷில்லாங் சென்றேன். அங்கு எலிபெண்டா அருவியைப் பார்த்தேன். காஷ்மீரின் தலைநகர் ஸ்ரீநகரில் உள்ள தால் ஏரியில் படகு சவாரி செய்தேன்.

பிறகு அங்கிருந்து ராஜஸ்தானில் உள்ள ஜெய்ப்பூர் நகருக்குச் சென்றேன். அங்கு ஒட்டகச் சவாரி செய்தேன்.

மகாராஷ்டிரத்தில் உள்ள மும்பை நகருக்குச் சென்றேன். அங்கு யானைக் குகைக்குப் படகில் சென்றேன்.

அங்கிருந்து காரில் மேற்கு கடற்கரை வழியாகக் கேரளா வந்தேன். பின்பு பாலக்காட்டுப் புற வழிச் சாலை மூலம் கோயம்புத்தூர் சென்றேன்.

"ஆஹா! என்ன அருமையான பயணம்" என்றாள் மீனா. உங்கள் பள்ளிக்கு ஆட்டோவில் வந்தேன். நான் பல வாகனங்களிலும் பயணம் செய்து இருக்கிறேன்." என்றார் மீனாவின் மாமா.

மீனா மன நிறைவுடனும், மகிழ்ச்சியுடனும் புகைப்படத் தொகுப்பை மூடினாள்.

7. உணவின் கதை



இவர்கள் முகம் ஏன் இப்படி உள்ளது ? இவர்கள் என்ன சாப்பிட்டனர் ?

கண்டுபிடி, அவற்றுடன் இணை.

இவற்றின் சுவை எப்படி இருக்கும் ?

இவற்றைச் சாப்பிட்ட உடன் நீங்கள் என்ன ஒலி எழுப்புவீர்கள் ?
உங்கள் முகம் எப்படி மாறும் ? நடித்துக் காட்டு.

நம் உணவு உருவான கதை

ஆதி மனிதர்கள் உணவுக்காக வேட்டையாடினர். இயற்கையில் கிடைத்த காய்களையும் பழங்களையும் உண்டனர்.

பின்னர் இயற்கையை உற்று நோக்கி விதைகளிலிருந்து தாவரங்கள் உண்டாவதைக் கண்டறிந்தனர். விதைகளைச் சேகரித்து பயிரிடப் பழகினர். உணவுப் பயிர்களைப் பயிரிடுவதற்காக ஆற்றங்கரைகளிலும், நீர் நிலைகளுக்கு அருகிலும் தங்கினர். இப்படித்தான் உழவுத்தொழில் தொடங்கியது.

உனக்கு மிகவும் பிடித்த உணவு வகைகள் எவை ?



உன் நண்பனுக்குப் பிடித்த உணவு வகைகள் எவை ?



உனக்கு ஒரே வகையான உணவு சாப்பிடப் பிடிக்குமா அல்லது வகை வகையாக சாப்பிடப் பிடிக்குமா ? ______________________________.

நீ வழக்கமாக உண்ணும் உணவு எது ? ______________________________.

இன்று காலை நீ என்ன சாப்பிட்டாய் ? ______________________________.

இன்று காலை நீயும் உன் நண்பனும் சாப்பிட்ட உணவு எந்தெந்த பொருள்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது ?

உன் நண்பனுடன் கலந்துப்பேசி எழுது.

____.

____.

____.

____.

நாம் சாப்பிடும் பெரும்பாலான உணவுகள் அரிசியைக் கொண்டு தயாரிக்கப்படுகின்றன. அரிசி தமிழர்களின் அடிப்படை உணவு . இந்தியாவில் பெரும்பாலான மக்களால் சேர்த்துக் கொள்ளப்படும் உணவுப் பொருள் அரிசியே ஆகும்.

நெல் சொல்லும் கதை

நான் யார் தெரியுமா ?

நான் நீங்கள் விரும்பி உண்ணும் அரிசியைத் தரும் நெல். நான் விளைய வளமான வண்டல் மண், அதிக மழை, மிதமான வெப்பம், ஈரப்பதம் தேவை. மழை குறைந்த இடங்களிலும் நீர்ப்பாசனம் மூலமாக சாகுபடி செய்கின்றனர்.

உழவு செய்த நிலத்தில் விதைகளை விதைப்பர். வளர்ந்த நாற்றுகளைப் பறித்து நீர் குறைந்த பண்படுத்தப்பட்ட நிலத்தில் நடுவர். களைகளை எடுப்பர். பயிர் வளர்ந்து வரும் பொழுது நீர் பாய்ச்சுவர். கதிர் முற்றியபிறகு அறுவடை செய்வர். கதிர் அடித்து என்னைப் (நெல்மணிகளை) பிரிப்பர். அரவை ஆலையில் அரிசியாக மாற்றுவர்.

பின்னர் சந்தைக்கு எடுத்துச் செல்வர், அங்கிருந்து உங்கள் வீடுகளை வந்தடைவேன். உங்களுக்குப் பிடித்த பல வகையான உணவாக மாறுவேன். நீங்கள் என்னை விதவிதமாய்ச் சமைத்து சாப்பிட்டு மகிழ்வீர்கள்.

படத்தைப் பார்த்து கரும்பில் இருந்து சர்க்கரை எவ்வாறு கிடைக்கிறது‘ என்பதைக் கலந்துரையாடு.

சர்க்கரையின் கதையைக் கூறு.

கரும்பு செழித்து வளர மிதமான வெப்பநிலை, வண்டல் மண், அதிக அளவு நீர் போன்றவை தேவை. கரும்பிலிருந்து வெல்லம், சர்க்கரை போன்ற இனிப்புப் பொருட்களைப் பெறுகிறோம்.

கேழ்வரகு



கம்பு வகை

சோளம்

மக்காச்சோளம்

ஓரிடத்தின் மண் வளம் மற்றும் காலநிலைக்கேற்பவே பயிர்கள் விளையும். அதுவே பெரும்பாலும் அப்பகுதியில் வாழும் மக்களின் உணவாகப் பயன்படுகிறது. கோதுமை, கேழ்வரகு, கம்பு, சோளம், சாமை, வரகு, தினை போன்றவை தானிய வகைகள். இவற்றைக் கொண்டு நாம் சத்தான உணவுப் பொருள்களை வித விதமாய்த் தயாரிக்கிறோம்.

ஒரு தானியம் பல உணவு...

பல தானியம் ஓர் உணவு...

சத்துமாவு என்பது பல சத்துள்ள தானியங்கள் மற்றும் பருப்பு வகைகளைக் கொண்டது. இதைக் கொண்டு தயாரிக்கப்படும் சத்துமாவு கஞ்சியைக் காலை உணவாக எடுத்துக் கொள்வது அனைவரின் உடல் நலத்திற்கும் நன்மை தரும்.

சத்துமாவு செய்ய பயன்படும் பொருள்களின் பெயர்களை பெரியவர்களிடம் கேட்டு எழுதி வா.

____

____

____

பருப்பு வகைகளிலிருந்து செய்யப்படும் உணவு வகைகள் சிலவற்றை உனது பெற்றோரிடம் கேட்டு எழுது.

உளுந்து

பாசிப் பருப்பு

நமது அன்றாட உணவில் பருப்பு வகைகளைச் சேர்த்துக் கொள்கிறோம். இதில் இருந்து நம் உடலுக்குத் தேவையான புரதச் சத்து கிடைக்கிறது.

பச்சைப் பயறு

கடலைப் பருப்பு

துவரம் பருப்பு

கீரையோ, கீரை . . .

பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நம் நாட்டில் கீரைகள் உணவுப் பழக்கத்தில் உள்ளன. இக்கீரைகள் உடலுக்கு பலத்தையும், சக்தியையும் தருகின்றன. நாம் உண்ணும் கீரை வகைகளில் நார்ச்சத்து, இரும்புச்சத்து மற்றும் உயிர்ச் சத்தும் உள்ளது. எனவே தினமும் நமது உணவில் ஏதேனும் ஒரு கீரையைச் சேர்த்து சாப்பிட வேண்டும்.

முருங்கை	தூதுவளை	சிறுகீரை	மணித்தக்காளி	வல்லாரை
அகத்திக்கீரை	வெந்தயக்கீரை	பசலைக்கீரை	முளைக்கீரை	பொன்னாங் கண்ணி

கீரையைக் கொண்டு எத்தனை விதமான உணவு வகைகள் சமைக்கப்படுகின்றன ?

உன் பகுதியில் விளையும் கீரை வகைகள் எவை ?

உணவே மருந்து...

உணவு தயாரிக்க கீழ்க் கண்ட பல பொருட்களை நாம் அன்றாடம் சேர்த்துக் கொள்கிறோம். இவை அனைத்தும் இயற்கையிலேயே மருத்துவ குணம் கொண்டவை.

உனக்கு பல்வலி, இருமல், வயிற்றுப்போக்கு, வயிற்றுவலி, தலைவலி ஏற்படும் நேரங்களில் உனது அம்மா அல்லது பாட்டி என்னென்ன கை வைத்தியங்கள் செய்வார்கள் ?



முத்தான உணவு! சத்தான உணவு!

நாம் அன்றாட வேலைகளைச் செய்திட நமக்குச் சக்தி தேவை. உணவின் மூலம் நம் உடலுக்குச் சக்தி கிடைக்கிறது. உணவு நமது உடல் வளர்ச்சிக்குப் பயன்படுகிறது. மேலும், பலத்தையும் ஆரோக்கியத்தையும் தருகிறது. எனவே நாம் சத்தான உணவை உண்ண வேண்டும்.

குழந்தை முதல் முதியவர் வரை அவரவர் உடல்நலத்திற்கு ஏற்ப உணவு பழக்க வழக்கங்கள் வேறுபடுகின்றன. ஒருவரது உடலுக்கு எது ஏற்றது என அறிந்து அளவோடு உண்ண வேண்டும்.

பிறந்த குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் எடுத்துக் கொள்ளும் சத்தான உணவு பால்.

குழந்தைகளும் பல் இல்லாத வயதானவர்களும் எந்தவிதமான உணவை உட்கொள்கின்றனர்? ஏன்?

உணவு வரும் வழி

பல்வேறு இடங்களில் இருந்து உணவுப் பொருள்கள் நம்மை எவ்வாறு வந்தடைகின்றன எனப் பார்ப்போமா? அதைக் காட்டும் தொடர் வரைபடம்.

கால்நடை வளர்த்தல்

மீன் பிடித்தல்



உழவுத் தொழில்



கோழி வளர்த்தல்

நெல், கோதுமை பயிரிடுதல் தவிர உணவிற்காக மக்கள் ஆடு, மாடு, கோழி போன்றவற்றையும் வளர்க்கின்றனர். இவற்றின் மூலம், இறைச்சி, பால், முட்டை ஆகியவை நமக்கு கிடைக்கின்றன. இவற்றில் இருந்து புரதம் மற்றும் கொழுப்புச் சத்து கிடைக்கிறது. ஆறு, ஏரி, கடலிலிருந்து கிடைக்கும் மீன் நமக்கு உணவாகப் பயன்படுகிறது.

இவைகளைத் தவிர நம் நாட்டில் தேயிலை, காபி போன்ற தோட்டப் பயிர்களும் மா, பலா, வாழை போன்ற பழ மரங்களும் நமது உணவிற்காக வளர்க்கப்படுகின்றன.

நீ விரும்பும் உணவு வகைகள் ______________________



____.

உனக்கும் உனது நண்பனுக்கும் விருப்பம் உள்ள உணவு வகைகள்.

____.

உனக்குப் பிடித்த உணவு வகைகள் உங்கள் வீட்டில் யார் யாருக்குப் பிடிக்கும் ?

____.

நீ விரும்பிய உணவில் இதுநாள் வரை சாப்பிடாத ஏதேனும் இரு உணவுகள்

____.

நீ விரும்பாத உணவு வகைகள்

____.

உனக்குப் பிடிக்காத உணவு ; ஆனால், பெற்றோர் உன் உடல் நலனுக்காக சாப்பிடச் சொல்வது.

____.

பெரியவர்களிடம் கேட்டு தகவல் சேகரி

பழங்காலத்தில் செய்யப்பட்ட சிறப்பான உணவு இன்று பழக்கத்தில் இல்லாதவை ______________________________________.

சிறு வயதில் அவர்கள் விரும்பி உண்ட தின்பண்டங்கள் ____________________

____.

இப்பொழுது அவர்களால் உண்ண முடியாத தின்பண்டங்கள் ___________

____.

பார்க்காமல், சாப்பிடாமல், சமைக்கும் வாசனையை வைத்தே கண்டு பிடிக்க முடியும் உணவு வகைகள் எவை எவை ? ____________________________

____.



சமைக்காமலேயே சாப்பிடக்கூடியவை எவை ? ______________________

____.

ஆவியில் வேகவைத்து உண்ணும் பொருள்கள் எவை ? __________________

____.

எண்ணெயில் பொரித்து உண்பவை எவை ? __________________________

____.

வடகம், வத்தல், அப்பளம் போன்றவை ஏன் கோடைக்காலங்களில் போடப்படுகின்றன ?

பண்டிகை இது. உணவு எது ?



உங்கள் ஊரில் கொண்டாடப்படும் மற்றத் திருவிழாக்கள் எவை ? அப்போது உங்கள் வீடுகளில் தயாரிக்கப்படும் முக்கிய உணவுகளைக் கூறு.

பழச்சாறு அருந்துவோமா ?

எலுமிச்சை பழம் ஒன்றை எடு.
அதை இரண்டாக வெட்டி சாறு எடு.
தேவையான சர்க்கரையைச் சேர்.
ஒரு சிட்டிகை உப்பைக் கலக்கு.
சிறிது தண்ணீர் கலந்து குடி.
சத்தான பானம் இது.

இது போலவே, சாத்துக்குடி பழத்திலும் செய்து பார்.

சத்தும் ருசியும் மிக்க பழக் கலவையும் காய்கறிக் கலவையும் தயாரிக்கலாமா ? செய்முறை எழுது.

8. நமக்காக...



இப்படத்தில் காணும் இடங்கள் எவை ?

அவற்றின் பெயர்களை எழுது.

முன் பக்கத்தில் உள்ள படங்களில் உள்ளவற்றில் எங்கே செல்வாய் ? வீட்டிலிருந்து கோடிட்டு இணை.

- உன் குடும்பத்தினருக்கு உடல் நிலை சரியில்லாத போது...
- கல்வி கற்பதற்கு...
- மண்ணெண்ணெய், சர்க்கரை போன்ற பொருள்களைக் குறைந்த விலையில் வாங்க...
- உங்கள் வீட்டில் இருசக்கர வாகனம் காணாமல் போனால்...
- பணத்தைச் சேமிக்க மற்றும் கடனுதவி பெற...
- கடிதத்தை வெளியூருக்கு அனுப்ப...
- புதிய வீட்டிற்கு மின் இணைப்பு தேவை எனில்..
- வீட்டிற்குக் குடிநீர் இணைப்பு பெற.... வீட்டு வரி கட்ட...

இவை அனைத்தும் நம் வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாதவை என அறிந்திருப்பாய்.

இவற்றில் உங்கள் வீட்டில் உள்ள அனைவரின் அவசியத் தேவைக்கு உதவும் இடங்கள் எவை ?
இவற்றில் நீ எந்தெந்த இடங்களுக்குச் சென்றிருக்கிறாய் ? ஏன் ?
உன் வீட்டிற்கு அருகில் உள்ள இடங்கள் எவை ? (நடந்து செல்லும் தூரம்)
தொலைவில் உள்ளவை எவை ? (வாகனத்தில் மட்டும் செல்லக்கூடியவை)

✔ செய்.

இடங்கள்	வீட்டிற்கு அருகில்	வீட்டிற்கு தொலைவில்	உதவும் விதம்
பள்ளி			
வங்கி			
மருத்துவமனை			
காவல் நிலையம்			
அஞ்சல் நிலையம்			
பேருந்து நிலையம்			

உங்கள் பகுதியில்,

வெள்ளைச் சீருடை அணிந்து பணிபுரிபவர்கள் யார் ? யார் ?

காக்கிச் சீருடை அணிந்து பணிபுரிபவர்கள் யார் ? யார் ?

உன் வீட்டில் உள்ளவர்கள் என்னென்ன வேலை செய்கின்றனர் ? எங்கு ?

உன் வீட்டிற்கு அருகில் உள்ளவர்கள் என்னென்ன வேலை செய்கின்றனர் ?

நீ வளர்ந்து வேலைக்குச் செல்லும்போது எந்தப் பணியைத் தேர்ந்தெடுப்பாய் ? ஏன் ?

அஞ்சல் நிலையம்

முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களுக்கு அனிச்சம் பாளையம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி மாணவி ஜனனி எழுதிய வாழ்த்து மடல்



राष्ट्रपति के अतिरिक्त निजी सचिव
ADDITIONAL PRIVATE SECRETARY
TO THE PRESIDENT

राष्ट्रपति भवन,
नई दिल्ली-110004.
RASHTRAPATI BHAVAN,
NEW DELHI - 110004

மார்ச் 10, 2004

அன்புச் செல்வி ஜனனிக்கு,

வணக்கம்,

தாங்கள் குடியரசுத் தலைவருக்கு எழுதிய கடிதம் கிடைத்தது. தாங்கள் நன்றாக உழைத்து, படித்து வாழ்வில் வெற்றியடைய குடியரசுத் தலைவர் தங்களுக்கு தமது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார்.

வாழ்த்துக்களுடன்,

அன்புள்ள,

(ஜெ. ராதாகிருஷ்ணன்)

Selvi K. Janani
D/o D. Kumaran
447, Devanadha Sami Nagar
Maharajapuram Post
Villupuram - 605 062

கடிதத்தின் நகல்

மாணவி ஜனனிக்கு, முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்கள் அனுப்பிய பதில் கடிதம்.

உன் வீட்டிற்கு ஏதேனும் கடிதம் வந்துள்ளதா ?________________________

அதில் என்ன தகவல் இருந்தது ?_______________________________

எங்கிருந்து வந்தது ?____________________________________

யாரிடமிருந்து வந்தது ?__________________________________

வந்த கடிதத்தில் உன் வீட்டின் முகவரி எங்கு எழுதப்பட்டிருந்தது ?

வேறு ஊரில் இருந்து வரும் கடிதங்கள் நமக்கு எப்படிக் கிடைக்கின்றன ?

ஒரு கடிதத்தின் பயணம் ...

நாம் கடிதங்களை அஞ்சல் பெட்டியில் சேர்க்கிறோம். அவைகள் அஞ்சல் அலுவலரால் சேகரிக்கப்பட்டு அஞ்சலகத்திற்கு அனுப்பப்படுகிறது. அங்கு கடிதங்கள் பகுதிவாரியாக பிரிக்கப்படுகின்றன. அவைஅஞ்சலகத்தின்முத்திரையிடப்பட்டு தரைவழி, கடல் வழி, வான்வழியாகப் பல்வேறு இடங்களுக்கு அனுப்பப்படுகின்றன. அங்கு மீண்டும் கடித உறைகளில் முத்திரையிடப்படுகின்றன. பகுதிவாரியாகப் பிரிக்கப்பட்டு, அந்த உறைகளின் மேல் உள்ள முகவரியில் சேர்க்கப்படுகின்றன.

அஞ்சலகத்தில் அஞ்சல் உறை, அஞ்சல் அட்டை, பணவிடை விண்ணப்பம், அஞ்சல் வில்லை, அரசு போட்டித்தேர்வுகளுக்கான விண்ணப்பங்கள் விற்கப்படுகின்றன. சேமிப்புப்பத்திரங்கள், மாணவருக்கான சிறு சேமிப்புத் திட்டங்கள் உள்ளன. அவசரச் செய்திகள் அஞ்சலகத்தில் தந்தி மூலம் உடனடியாக அனுப்பி வைக்கப்படுகிறது.

இவை என்ன ? பெயர் எழுது. விலை கூறு.

____________________ _______________ __________________

செய்து பார்:

விதவிதமான அஞ்சல் தலைகளைச் சேகரி. படத்தொகுப்பு தயார் செய். நீ உன் நண்பனுக்கு கடிதம் எழுது. உன் நண்பனை உனக்குக் கடிதம் எழுதச் சொல். இருவரும் தபால் பெட்டியில் போடுங்கள். பிறகு கடிதம் உங்களை எவ்விதம் வந்தடையும் என்பதைப் பற்றி கலந்து உரையாடுங்கள்.

உன் ஊரில் உள்ள அஞ்சல் பெட்டியைச் சென்று பார். அதில் எழுதப்பட்டிருக்கும் அஞ்சல் எடுக்கும் நேரத்தை அறிந்து வா. உங்கள் தெருவிற்கு கடிதம் கொண்டு வரும் அஞ்சல்காரர் பெயர்______________________________________

தகவல் தொடர்பு துறையின் வளர்ச்சியால் தபால், தந்தி அனுப்புவது குறைந்துள்ளது. கணினியின் வரவால் தொலைநகல், மின்னஞ்சல் மற்றும் கைபேசி மூலமாக தகவல் தொடர்பு நடைபெறுகிறது.



வங்கி

வங்கிகள் பல உள்ளன. வங்கிகளில் பணத்தைச் சேமிக்கலாம். சேமிப்புக் கணக்கில் விருப்பப்படி பணம் செலுத்தலாம். சேமித்ததைத் தேவைப்படும் போது எடுக்கலாம். பாதுகாக்க நினைக்கும் தங்கம், வெள்ளி, ஆவணங்கள் போன்றவற்றை வங்கியில் உள்ள பாதுகாப்புப் பெட்டகத்தில் வைக்கலாம்.

உனக்குத் தெரிந்த வங்கிகளின் பெயர்களை எழுது ____________________

____

____

வங்கியில் சேமிப்புக் கணக்குத் தொடங்க உள்ள நடைமுறைகளை அறிந்து வா.

தானியங்கி பணப்பட்டுவாடா இயந்திரம்



இது தானியங்கி பணப்பட்டுவாடா இயந்திரம். நம் வங்கிக் கணக்கில் உள்ள பணத்தை நினைத்த நேரத்தில் எடுத்துக் கொள்ளலாம். பற்று அட்டையைக் கொண்டே இதிலிருந்து பணத்தை எடுக்க முடியும். இது 24 மணி நேரமும் செயல்படும்.

காசோலை, வரைவோலை குறித்து அறிந்து வா.



நமது நண்பர்கள்



படத்தைப் பார்.அதில் உள்ள மக்கள் செய்யும் வெவ்வேறு தொழில்களை எழுது.

மக்கள் தங்கள் தேவைக்காகவும் மற்றும் தங்களைச் சார்ந்துள்ள மக்களின் தேவைக்காகவும், உழைத்து பணம் சம்பாதிக்கின்றனர். இதையே தொழில் அல்லது வேலை என்கிறோம். நாம் வாழும் சமுதாயத்தில் பல்வேறு வகையான தொழில்களைச் செய்யும் மக்கள் சேர்ந்து வாழ்கின்றனர். அனைத்து தொழில்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை.

கொத்தனார் வீடுகள், அடுக்குமாடிக் கட்டிடங்களைக் கட்டுகிறார். கதவு, சன்னல்களைத் தச்சர் தயார் செய்து பொருத்துவார். நீர்க் குழாய் இணைப்பு தருபவர் (பிளம்பர்) கட்டிடங்களுக்கும் கழிப்பிடங்களுக்கும் குழாய் இணைப்பு தருவார் மற்றும் பழுது பார்ப்பார்.

யார் இவர்கள் ?

கட்டிடம் கட்டுபவர்கள் ____________________

கதவு, சன்னல் செய்பவர் ____________________

குடிநீர் குழாய் இணைப்பவர் ____________________

பள்ளிச் சீருடை தைப்பவர் ____________________

உனக்கு எழுத, படிக்கக் கற்பிப்பவர் ____________________

துணிகளைத் தேய்த்துத் தருபவர் ____________________

இவர்களைப் போல உன் வாழ்க்கைக்கு உதவும் பிற அத்தியாவசியத் தொழிலாளர்களின் பெயர்களைப் பட்டியலிடு.

____________________ ____________________

____________________ ____________________

____________________ ____________________

____________________ ____________________

நம் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான தேவைகள் பலவற்றைப் பார்த்தோம். அவற்றில் மிக முக்கியமானது நம் உடல் ஆரோக்கியம். நாம் ஆரோக்கியமாக வாழ மருத்துவமனைகளும், ஆரம்ப சுகாதார நிலையங்களும் உதவுகின்றன. அரசாங்கமும், பொது சேவை நிறுவனங்களும் இதற்காகப் பல முயற்சிகளை மேற்கொள்கின்றன. நாம் உடல் நலமில்லாமல் இருக்கும் பொழுது நமக்கு மருந்து கொடுப்பவர் மருத்துவர்.

செவிலியர் (நர்ஸ்) வாரம் ஒரு முறை கிராமப் பகுதிகளுக்குச் சென்று மருந்துப் பொருள்களை வழங்குவார். நகரங்களில் அரசு பொது மருத்துவமனைகளும், கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்களும், குக்கிராமங்களில் நடமாடும் மருத்துவமனைகளும் மக்களின் நலனுக்காக ஏற்படுத்தப் பட்டுள்ளன. இவை மக்களுக்கு இலவச சிகிச்சை அளிக்கின்றன.



இன்று அரசு மருத்துவமனைகளும் சித்த மருத்துவத்திற்கு முக்கியத்துவம் தருகின்றன. உடல்நலமில்லாத பறவைகளுக்கும் , விலங்குகளுக்கும் சிகிச்சை அளிக்க கால்நடை மருத்துவமனைகள் உள்ளன.

உன்னுடைய சுற்றுப்புறத்தில் உள்ளவர்கள் செய்யும் வேலைகளில் ஏதேனும் ஐந்தை எழுது. அவர் செய்யும் வேலையைக்கொண்டு அவர்களை எந்த பெயரில் அழைப்பார் ?

செய்யும் வேலை	வேலையின் பெயர்
உடல் நலமில்லாதவர்களுக்கு சிகிச்சை அளித்தல்	மருத்துவர்

நம்மில் ஒருவர்



படத்தில் உள்ளவர்கள் என்னென்ன வேலை செய்கின்றனர் ?

உன் பகுதியில் பிறருக்கு உதவும் வகையில் பணிபுரியும் மக்களைப் பார்த்திருக்கிறாயா ? ஆம் / இல்லை.

உன்னுடைய சுற்றுப்புறத்தைச் சுத்தம் செய்பவர் யார் ? ____________________

எந்தெந்த வகையில் உன் சுற்றுப்புறத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்வாய் ?

____

நாம் சுகாதாரமாக வாழ உதவும் முக்கியமான தொழிலாளர்களைப் பற்றித் தெரிந்து கொள்ளலாமா ?

சாலையைச் சுத்தம் செய்தல், பழுது பார்த்தல், பொதுக் கழிப்பிடம், பொதுக் குப்பைத்தொட்டி மற்றும் கழிவு நீர் அடைப்பைச் சுத்தம் செய்து, பழுது பார்த்தல் போன்ற தொழில்களைச் செய்யும் நண்பர்களும் நம் சமுதாயத்தில் உள்ளனர்.

அவர்கள் நமக்கு நன்கு சேவை செய்ய, நாம் எவ்விதம் உதவ வேண்டும் தெரியுமா ?

நாம் கழிப்பிடங்களை முறையாகப் பயன்படுத்த வேண்டும். குப்பைகளைப் பிரித்து வைக்க வேண்டும். சாக்கடை அடைக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். நாம் வீதிகளில் எச்சில் துப்புவதோ, வீணான குப்பைகளை எறிவதோ கூடாது. ஏன் என்றால் நம்மைப் போன்ற மனிதர்கள்தான் அவற்றைச் சுத்தம் செய்கிறார்கள்.

ஒரே ஒரு நாள் இவர்கள் அனைவரும் வேலை செய்யாமல் இருந்தால் என்ன நிகழும் ?

உன் ஊரில் நீ அறிந்த மற்ற பணியாளர்கள் யார் ? யார் ?

உன்னுடைய சுற்றுப்புறத்தில் பழுதுகளைச் சீர் செய்யும் பணிகள் என்னென்ன நடைபெறுகின்றன ?

உங்கள் தெருக்களைத் தூய்மைப்படுத்தி, தெரு விளக்குகளை அமைத்துக் கொடுப்பவர் யார் ?

உங்கள் வீட்டுக்குக் குடிநீர் இணைப்பு மற்றும் கழிவு நீர் கால்வாய் இணைப்பு தருகிறவர்கள் யார் ?

அனைவருக்கும் பொதுவான இந்த வசதிகளை ஒரே விதமாக செய்து தரும் அமைப்பிற்கு ஊராட்சி என்று பெயர். தெருவிளக்கு, குடிநீர், சாலை வசதி, உடல் ஆரோக்கியம், பொழுதுபோக்கு, கல்வி, போன்ற மக்களின் அடிப்படைத் தேவைகளை ஊராட்சிகள் பூர்த்தி செய்கின்றன.

கிராமம்	ஊராட்சி
பெரிய கிராமம்	பேரூராட்சி
நகரம்	நகராட்சி
பெரிய நகரம்	மாநகராட்சி

இவை மக்களுக்குத் தேவையான பொது வசதிகளைச் செய்து தருகின்றன.

உன் ஊர் எந்த வகையைச் சார்ந்தது ?

ஊராட்சி ☐ பேரூராட்சி ☐ நகராட்சி ☐ மாநகராட்சி ☐

உன் வீட்டிற்குத் தேவையான தண்ணீர் எங்கிருந்து கிடைக்கின்றது ?

மக்களின் அடிப்படை தேவைகளில் ஒன்று தண்ணீர் ஆகும். அவை பற்றாக்குறை உள்ள இடங்களில் சேமித்து வைத்துப் பயன்படுத்த நீர்த்தேக்கத் தொட்டி பயன்படுகிறது. இதற்கான பொறுப்பை கிராம / நகர தலைவர்கள் ஏற்று நடத்துவார்கள்.

நியாய விலைக் கடை

குறைந்த விலையில் தரமான உணவுப் பொருட்கள் கிடைக்கும் இடம் நியாய விலைக் கடை. இது குடிமைப் பொருள் வழங்கும் பொது விநியோகக் கடை என்றும் அழைக்கப்படுகிறது .

உணவுப் பொருட்கள் வாங்குவதற்கு குடும்ப அட்டை அவசியம். குடும்ப அட்டை, அடையாள அட்டையாகவும் பயன்படுத்தப்படுகிறது. மக்களின் ஊதியத்திற்கு ஏற்ப அரசால் இந்த அட்டை வழங்கப்படுகிறது. இந்தியாவின் அனைத்து பகுதிகளிலும் நியாயவிலைக் கடை உள்ளது.

உன் ஊர் நியாய விலைக் கடையில் கிடைக்கும் பொருள்களைத் தெரிந்து எழுது.








காக்கும் கரங்கள்



காவல் நிலையம்	☎	100
தீயணைப்பு நிலையம்	☎	101
மருத்துவ அவசர ஊர்தி	☎	102 108

கலந்துரையாடு

படத்தில் நீ என்ன பார்க்கிறாய் ?

நீ அந்த இடத்தில் இருந்தால் உடனடியாக என்ன செய்வாய் ?

இவர்களில் முதலில் யாரை நீ அழைப்பாய் ?

தீயணைப்பு நிலையத்தில் வேலை செய்பவர்கள் தீயணைப்பு வீரர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். எதிர்பாராமல் தீ விபத்து ஏற்படும் போது தீயை அணைக்க உதவுகின்றனர். உயிர்சேதமும் பொருட்சேதமும் ஏற்படாமல் பாதுகாக்கின்றனர். புயல், வெள்ளம், நிலநடுக்கம் போன்ற இயற்கைச் சீற்றங்கள் ஏற்படும் போது இவர்கள் மக்களைக் காப்பாற்றி பேருதவி செய்கின்றனர்.

காவலர்கள்

இவரைத் தெரிகிறதா ?

இவர் எங்கே இருப்பார் ?

இவரின் வேலை என்ன ?

நாம் வைத்திருக்கும் பொருள்கள் களவு போனாலோ அல்லது நமக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டாலோ உதவி செய்வது இவர்களது கடமையாகும். ஒவ்வொரு பகுதியிலும் அங்குப் பணிபுரியும் காவலர்கள் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கின்றனர்.

காவலர் பணிகள்

குற்றம் நிகழாமல் தடுத்தல்.

போக்குவரத்தைச் சரி செய்தல்

பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல்

காவலர்கள் நாம் அளிக்கும் புகார்களைப் பதிவு செய்து கொண்டு அதற்கேற்ப நடவடிக்கை எடுப்பர். காவலர்கள் இருபத்து நான்கு மணி நேரமும் பணிபுரிவதால் நாம் பாதுகாப்பாக வாழ்கிறோம்.

உன் ஊரில் காவல் நிலையம் உள்ளதா ?

உனக்கு தெரிந்தவர்கள் யாரேனும் இராணுவத்தில் பணிபுரிகின்றனரா ?

இந்த மூன்றில் உனக்குப் பிடித்தது எது ?

☐ தரைப்படை

☐ கப்பற்படை

☐ விமானப் படை

எல்லா மக்களுக்கும் பயன்படும் வகையில் செயல்படும் நிறுவனங்களே, பொது நிறுவனங்கள் எனப்படும். அவை அரசுக்கு உட்பட்டவை. தனி நபருக்குரியது இல்லை. அவற்றின் செயல்பாடுகளும், பலன்களும் அனைத்து மக்களுக்கும் பொதுவானவை.

9. நமது மாவட்டம்

மாலா மிகவும் மகிழ்ச்சியுடன் காணப்பட்டாள். அன்று முதல் முறையாக அவளுடைய வீட்டிற்கு வெளிநாட்டில் இருந்து உறவினர் ஒருவர் வந்திருந்தார்.

அவர் இந்நாட்டிற்கு வந்து மாலாவின் வீட்டைக் கண்டுபிடிக்க என்னென்ன விவரங்கள்அறிந்திருக்க வேண்டும் தெரியுமா ?

மாலா வசிக்கும் நாட்டின் பெயர்

மாநிலத்தின் பெயர்

மாவட்டத்தின் பெயர்

ஊரின் பெயர்

தெருவின் பெயர்

வீட்டின் எண்



இவை அனைத்தும் தெரிந்திருந்தால் தான் வீட்டை எளிதில் கண்டறிய முடியும். இது போல உன் மாநிலம், மாவட்டம், ஊரைத் தெரிந்து கொள்ளலாமா ?

நீ வாழும் மாநிலம் தமிழ்நாடு. அதன் மாவட்டப் பிரிவுகள் நில வரைபடத்தைப் பார். அதில் உன் மாவட்டத்தைக் கண்டுபிடி. ✓ செய்.

உன் மாவட்டத்தின் பெயர் ________________________________

இதற்கு இப்பெயர் வர ஏதேனும் காரணக் கதை உள்ளதா ?

வரைபடத்தில் மாவட்டங்களுக்கு ஒன்று, இரண்டு என எண்களை இடு.

தமிழ்நாடு மாவட்டங்கள் நில வரைபடம்

தமிழ்நாட்டில் எத்தனை மாவட்டங்கள் உள்ளன ? எண்ணி எழுது____________

நம் மாநிலத்தின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள கடல் ____________________

நம் மாநிலத்தின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள கடல்____________________

உன் மாவட்டத்தைச் சுற்றியுள்ள மாவட்டங்களின் பெயர்களை எடுத்து எழுது.

____

உன் மாவட்டத்திற்கு அருகில் கடல் உள்ளதா ? ____________________

ஆம் எனில் கடலின் பெயர் ______________________________

உன் மாவட்டம் எந்தப் பகுதியில் அமைந்துள்ளது ?

மலைப் பகுதி ☐ கடற்கரைப் பகுதி ☐ சமவெளிப்பகுதி ☐

உனது மாவட்டத்தில் காணப்படும் நீர் நிலைகள்

ஏரி ☐ குளம் ☐ ஆறு ☐ கடல் ☐ இன்னும் பிற ☐

இந்த மாதத்தில் உனது மாவட்டத்தில் நிலவும் காலநிலை

வெப்பம் ☐ மழை ☐ குளிர் ☐

ஒரு ஆண்டுக்கு உரிய மாதக் காலண்டரை எடுத்துக் கொள்ளவும். ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு நாளின் வானிலையைப் பக்கம் 23ல் உள்ள குறியீட்டைப் பயன்படுத்திக் குறி. எந்தெந்த மாதங்களில் எந்தக் குறியீட்டை அதிகம் பயன்படுத்தி இருக்கின்றாய் ? அதிகம் பயன்படுத்தப்பட்ட குறியீட்டிற்குரிய வானிலையே அந்த மாதத்தின் காலநிலை ஆகும்.

இதன் மூலம் வருடத்தின் பருவ காலங்களை அறிந்து கொள்ளலாம்.

குழு செயல்பாடு

ஒவ்வொரு குழுவும் ஒவ்வொரு மாதத்திற்கு உரிய தகவல்களைப் பதிவு செய்யவும். அப்பொழுது அதிகம் கிடைக்கும் உணவுப் பொருள்கள், காய்கள், பழங்கள், பூக்கள், பார்த்த பறவைகள், பண்டிகைகள், உள்ளூர் திருவிழாக்கள், சிறப்பாக அணியும் உடைகள் ஆகியவற்றைத் தினமும் குறிக்கவும்.

செப்டம்பர் 2011

ஆகஸ்ட் 2011

ஜூலை 2011

ஜூன் 2011

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
			1	2	3	4
5	6	7	8	9	10	11
12	13	14	15	16	17	18
19	20	21	22	23	24	25
26	27	28	29	30		



உன் மாவட்டத்தில் எந்தெந்த மாதங்கள் ...

கோடைக் காலம் ________________

குளிர் காலம் ____________________

மழைக் காலம் ____________________

உன் மாவட்டத்தில் காணப்படும் குன்றுகள் / மலைகள்____________________

____

உன் மாவட்டத்தில் பாயும் ஆறுகள் ____________________________________

உன் மாவட்டத்தில்...

காடுகள் உள்ளனவா ? ஆம் / இல்லை

விளை நிலங்கள் உள்ளனவா ? ஆம் / இல்லை

விளையும் பயிர்கள் (தானியங்கள், காய்கறி மற்றும் பழங்கள்)

____

தொழிற்சாலைகள் உள்ளனவா ? ஆம் / இல்லை .

தொழிற்சாலையின் பெயர்	உற்பத்தி செய்யும் பொருட்கள்	அமைவிடம்

உன் மாவட்டத்தில் காணப்படும் பல்வேறுபட்ட தொழிற்சாலைகளின் படங்களைச் சேகரித்து ஒரு படத்தொகுப்பு தயார் செய்.

உன் மாவட்டத்தில் இந்தப் போக்குவரத்து வசதிகள் உள்ளனவா ?

- பேருந்து நிலையம் ☐
- விமான நிலையம் ☐
- தொடர்வண்டி நிலையம் ☐
- துறை முகம் ☐

நில வரைபடத்திற்கு அருகில் கொடுக்கப்பட்டுள்ள மாவட்டங்களைப் பார்.
வரைபடத்தைப் பார்த்து மாவட்டங்களைக் கண்டுபிடி. பெயர் எழுது.







உன் மாவட்டத்தில் உள்ள முக்கிய சுற்றுலாத்தலங்கள்

வரலாற்றுச்சிறப்பு மிக்க இடங்கள்	கோடை வாழிடம்	புனிதத்தலங்கள்	சரணாலயம் / உயிரியல் பூங்கா

உன் மாவட்டத்தில் அதிகம் பேசப்படும் மொழி ______________________

சிறப்பாகக் கொண்டாடப்படும் விழாக்கள் ______________________

____

உள்ளூர் விழாக்கள் ______________________________

____

அப்பொழுது நடைபெறும் கலைநிகழ்ச்சிகள் ______________________

____

ஆசிரியர் உதவியுடன் உன் மாவட்டத்தின் வட்டப் பிரிவுகள் நில வரைபடத்தைப் பார்த்து தகவல் சேகரி.

மாவட்டத்தில் உள்ள வட்டப் பிரிவுகளின் எண்ணிக்கை______________

நீ வாழும் பகுதியின் பெயர்______________________________

அப்பகுதி அமைந்துள்ள வட்டப் பிரிவு ______________________

ஒவ்வொரு மாவட்டத்திற்கு என்று தனி சிறப்பு உண்டு. உதாரணமாகச் சேலம் என்றவுடன் நினைவில் வருவது மாம்பழம்.

திண்டுக்கல் – பூட்டு

தஞ்சாவூர் – தலையாட்டி பொம்மை

உன் மாவட்டத்தின் தனிச் சிறப்பு என்ன ? ....

இது போன்று ஒவ்வொரு மாவட்டத்திற்கும் உள்ள சிறப்பினை கண்டுபிடித்து எழுது.

பார்த்து மகிழ . . .

செஞ்சிக் கோட்டை

குற்றாலம் நீர் வீழ்ச்சி

நாகூர் தர்கா

மெரினா கடற்கரை

நீலகிரி தாவரவியல் பூங்கா

வேளாங்கன்னி மாதாகோயில்

கன்னியாகுமரி திருவள்ளுவர் சிலை

பாம்பன் பாலம்

கல்லணை

தூத்துக்குடி துறைமுகம்

படங்களில் உள்ள சிறப்பு மிக்க இடங்கள் எந்தெந்த மாவட்டங்களில் உள்ளன ? கண்டுபிடி. பெயர் எழுது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள சிறப்பு மிக்க இடங்களை ஆசிரியர் துணையுடன் கண்டுபிடி.

தஞ்சை பெரிய கோயில்

மாமல்லபுரம்

மாமல்லன்

மாமல்லபுரம் சுற்றுலா செல்லப் போகிறோம் என்று ஆசிரியர் கூறினார். அதைக் கேட்ட கண்ணகிக்கும் அவளுடைய தோழிகளுக்கும் மிகுந்த மகிழ்ச்சி. அவர்கள் சென்னை மாநகராட்சிப் பள்ளியில் படிக்கின்றனர்.

அம்மா அவளுக்குச் சுற்றுலாவில் சாப்பிடச் சப்பாத்தியும், புளிசாதமும் கட்டிக் கொடுத்தார். அன்று வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. குளிர்ந்த காற்று வீசியது. பள்ளியில் தமிழ்நாடு சுற்றுலாத்துறையின் பேருந்தை ஏற்பாடு செய்திருந்தார்கள். அதில் வசந்தன் என்ற வழிகாட்டியும் வந்திருந்தார்.

சரியாக ஏழு மணியளவில் குழந்தைகளுடன் பேருந்து கிளம்பியது. கிழக்குக் கடற்கரைச் சாலை வழியாக பேருந்து சென்றது.

குழந்தைகள் பேருந்தில் ஆடியும் பாடியும் மகிழ்ந்தனர். நன்னீரும் கடல் நீரும் கலக்கும் முட்டுக்காடு அருகில் பேருந்து சென்றது. வழிகாட்டி, அங்குள்ள அலைகள் இல்லாத அமைதியான கடலைக் காட்டினார். காலை பத்து மணி அளவில் பேருந்து மாமல்லபுரத்தை அடைந்தது.

பல ஆண்டுகளுக்கு முன்பு மாமல்லபுரம் பல்லவ மன்னர்களின் துறைமுகமாக விளங்கியது. இன்று புகழ்வாய்ந்த சுற்றுலாத் தலமாக உள்ளது. வரலாற்றுச் சிறப்பு மிக்க மாமல்லபுரத்தை வழிகாட்டி சுற்றிக் காட்டத் தொடங்கினார்.



புலிக்குகை

முதலில், கடற்கரைக் கோயிலையும் ஐந்துரதங்களையும் காண குழந்தைகளை அழைத்துச் சென்றார். இங்குள்ள கடற்கரைக் கோயிலும் குடைவரைக்கோயிலும் மன்னர் நரசிம்மவர்மனால் கட்டப்பட்டன என்றார்.

மேலும் திருமூர்த்தி குகை, வராகக்குகை, புலிக்குகை, சிற்பப் பயிற்சிக் கூடங்கள், கடற்கரை, பழைய மற்றும் புதிய கலங்கரை விளக்கம் ஆகியவற்றையும் காட்டினார்.

பாறைகளைக் குடைந்து உருவாக்கப்பட்ட குகைக் கோயில்களும் சிற்பங்களும் மாமல்லபுரத்தின் தனிச் சிறப்பு என்று வசந்தன் கூறினார். சிற்பங்கள் செதுக்கப்பட்ட பாறைகளில் சில எழுத்துக்களைப் பார்த்தனர்.



“ இவை என்ன எழுத்துக்கள் ?” என்று கேட்டாள் கண்ணகி. “ இவை மிகவும் பழமையான தேவநாகரி மற்றும் தமிழ் கிரந்த எழுத்துக்கள்” என்றார். உடனே கண்ணகியும் அவள் தோழியும் மணலில் அந்த எழுத்துக்களை எழுதிப் பார்த்தனர்.

“ பல்லவ மன்னர்களுக்கு முன்பே இங்கு மக்கள் வாழ்ந்து வந்தனரா ?” எனப் பீட்டர் கேட்டான். “ஆமாம்” என்றார் வழிகாட்டி.

அர்ச்சுனன் தபசு

குடைவரைக் கோயில்

“ இங்கே பாருங்கள் ஒரு பூனை, முட்டாள் எலியை தன் பக்கத்தில் வரச் செய்ய தியானம் செய்வது போல் நடிக்கிறது. அக்காலத்தில் மக்கள் நகைச்சுவை உணர்வுடன் வாழ்ந்தனர் என்பதற்கு இதுவே சிறந்த எடுத்துக்காட்டு”, என்றார் வழிகாட்டி.

பாறையில் செதுக்கப்பட்ட தூண்கள் உள்ள ஒரு கூடத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கு கிருஷ்ணன் பெரிய மலையைக் குடையாக பிடித்து, பெரும் இடி மழையில் இருந்து தனது கிராமத்து மக்களைக் காப்பது போன்ற ஒரு சிலையைக் காண்பித்தார். மாணவர்கள் ஆர்வத்துடன் இரசித்துப் பார்த்தனர்.

பெரிய கல் ஒன்று பாறைச் சரிவில் விழாமல் நிற்பதை வியப்புடன் கண்டனர்.

வெண்ணெய் உருண்டை கல்

பின்பு ஒரே கல்லில் செதுக்கப்பட்ட ஐந்து இரதங்கள் உள்ள பகுதிக்கு அழைத்துச் சென்றார். இரதங்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு வடிவில் செதுக்கப்பட்டுள்ளதைப் பார்த்தனர். அவற்றிக்குப் பஞ்சபாண்டவர்களின் பெயர் வைத்துள்ளதை வசந்தன் விளக்கினார்.

ஐந்து இரதங்கள்

“ நான் மகாபாரதத்தில் இப் பெயர்களைப் படித்துள்ளேன்” என்று வியந்தாள் கண்ணகி. மதிய உணவு நேரம். மாணவர்கள் வட்டமாக அமர்ந்தனர். தாங்கள் கொண்டு வந்த உணவினை ஒருவருக்கு ஒருவர் பகிர்ந்து மகிழ்ச்சியாக உண்டனர்.

கலங்கரை விளக்கம்

உணவிற்குப் பின், அவர்கள் கலங்கரை விளக்கத்திற்குச் சென்றனர். அதன் மேல் ஏறி மாமல்லபுரத்தின் அழகைப் பார்த்து வியந்தனர்.

பழைய
கலங்கரை விளக்கம்

பின்னர் கடற்கரைக் கோயிலுக்குச் சென்றனர். அதைச் சுற்றிப் பார்த்துவிட்டு கடற்கரைக்கு வந்தனர்.

மாமல்லபுரத்தைக் காண குடும்பத்துடன் குழந்தைகளும், வெளிநாட்டவர்களும் வந்திருந்தனர். அங்கு சங்குகளையும், சோழிகளையும் விற்பனை செய்யும் பல கடைகள் காணப்பட்டன. கண்ணகி தன் தாய்க்காக ஒரு பரிசுப் பொருளை வாங்கினாள். குழந்தைகள் பல அரிய மற்றும் புதிய செய்திகளை அறிந்து கொண்டதற்கு வசந்தனுக்கு நன்றி கூறினர். மன நிறைவுடன் சென்னை திரும்பினர்.

இதே போல் நீங்களும் உங்கள் மாவட்டத்தில் உள்ள சிறப்பு மிக்க இடங்களைப் பள்ளியின் மூலமாக சுற்றுலா சென்று பார்வையிடுங்கள்.

கடற்கரைக் கோயில்

10. ஐவகை நிலங்கள்

பூமி தோன்றிய பொழுது அதன் நில அமைப்பு பல்வேறு நிலைகளில் உருவானது. இயற்கையில் ஏற்பட்ட இந்த அமைப்புகளின் சூழ்நிலைக்கேற்ப தாவரங்களும் விலங்குகளும் தோன்றின. அதனைத் தொடர்ந்து மனித இனம் தோன்றியது.

இயற்கையில் மலைகள், காடுகள், வயல்வெளிகள், கடற்கரைப் பகுதிகள் காணப்படுகின்றன. அந்தந்தப் பகுதியில் இருக்கும் இயற்கை வளங்களைக் கொண்டு உயிரினங்கள் வாழ்கின்றன. மக்களின் வாழ்க்கை முறை, தொழில், பண்பாடு போன்றவை அந்தந்த நிலப் பகுதியைப் பொருத்தே அமையும்.



நம் முன்னோர்கள்

மலையும் மலை சார்ந்த நிலப் பகுதியும் குறிஞ்சி

காடும் காடு சார்ந்த நிலப் பகுதியும் முல்லை

வயலும் வயல் சார்ந்த பகுதியும் மருதம்

கடலும் கடல் சார்ந்த பகுதியும் நெய்தல்

மணலும் மணல் சார்ந்த பகுதியும் பாலை

எனப் பிரித்துள்ளனர். நம் நாட்டின் வரலாறு அந்தந்த புவியியல் அமைப்புடன் தொடர்புடையதாக உள்ளது. மலைகள், காடுகள், வயல் வெளிகள், கடற்கரைப் பகுதிகளில் வாழ்கின்ற குழந்தைகள் அவர்கள் பகுதியைப் பற்றிக் கூறுவதைக் கேட்போமா ?

மலைப் பகுதிகள் (குறிஞ்சி)

நான் சோலையம்மா. என் வீடு கொல்லி மலையில் உள்ளது. எங்கள் மலைப்பகுதி நிலப்பகுதியை விட உயரமாக இருக்கும். அதனால் காலையிலும், மாலையிலும் குளிருடன் பனி மூட்டமாக இருக்கும். எதிரில் இருப்பது ஒன்றுமே தெரியாது. எங்கள் மலையில் உள்ள விலங்குகள், பறவைகள், மரங்கள், பழங்கள், பூக்கள் பற்றி உங்களிடம் சொல்ல வேண்டும் போல் உள்ளது.

எங்கள் மலையில் அருவி, நீரோடை, ஏரிகள் உள்ளன. அதனால் பெரிய பெரிய இலைகளை உடைய மரங்கள் இருக்கின்றன. அவை என்னென்ன தெரியுமா? தேக்கு, சந்தனம், கோங்கு போன்றவை. மலை வாழை, பலா, கொய்யா, சீத்தாப்பழம் போன்ற பழ மரங்களும் மிகுதியாக உள்ளன.

நாங்கள் பழங்குடியினர். எங்களுடைய தொழில் மலைகளில் கிழங்கு, தேன், பழம், வேர், இலை மற்றும் அரிய மூலிகைப் பொருள்களைச் சேகரிப்பது. மலைப்பகுதியில் வனவிலங்குகளை வேட்டையாடுவது தடை செய்யப்பட்டுள்ளது.

இங்கு யானை, குரங்கு, காட்டெருமை, சிறுத்தை, நீர் நாய், புலி, காட்டுப்பன்றி, வரை ஆடு, மான், கரடி போன்ற பெரிய விலங்குகள் உள்ளன. கழுகு, பருந்து, கிளி, குயில், மரங்கொத்தி, ஆந்தை போன்ற பறவைகள் காணப்படுகின்றன.

குறிஞ்சி, காந்தள், தாமரை, ரோஜா போன்ற மலர்கள் குளிர்க் காற்றில் நன்கு மலர்கின்றன. குறிஞ்சி மலர் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கும். மலைப்பழங்களில் திண்டுக்கல் சிறுமலை வாழை சிறப்பானது.

எங்கள் மலைப் பகுதியைப் போல், தமிழ்நாட்டில் எங்கெங்கு இருக்கிறது எனத் தெரியுமா ? அவற்றை இந்த வரைபடத்தில் எங்கள் ஆசிரியர் காட்டினார். நீங்களும் பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

மலை என்றவுடன் உன் நினைவில் வருபவை எவை ?
நீ ஏதேனும் ஒரு மலைப் பகுதிக்குச் சென்றிருக்கிறாயா ?
எங்கு ?

வரைபடத்தில் மலைப் பகுதிகள் உள்ள மாவட்டங்களின் பெயர்களை எடுத்து எழுது.

____

____

____

____

____

____

____



காடுகள் (முல்லை)

என் பெயர் நந்தினி. நாங்கள் சத்தியமங்கலத்தில் வாழ்கிறோம். எங்கள் பகுதியில் காடுகள் அதிகம் உள்ளன. நாங்கள் ஆடு, மாடு மேய்ப்பதைத் தொழிலாக வைத்துள்ளோம். கால் நடைகள்தான் எங்கள் சொத்து.

என் அப்பா காலையில் 5 மணிக்கு ஆடு மாடுகளை மேய்ச்சலுக்கு ஓட்டிச் செல்வார். உச்சி வெயிலுக்கு முன் வீடு திரும்புவார். அம்மா பாலும், மோரும் விற்பார்கள். எங்களுடையது வானம் பார்த்த பூமி. மிதமான மழை பெய்யும். சிறிய இலைகளை உடைய மரங்கள் இங்கு அதிகம். மா, பலா, புளி, வேம்பு, கொடுக்காப்புளி போன்ற மரங்கள் உள்ளன.

கம்பு, கேழ்வரகு, சோளம், தினை போன்ற தானிய வகைகள் இங்குள்ள சமவெளிகளில் பயிரிடப்படுகின்றன.

ஆடு, மாடு, எலி, பறக்கும் அணில், முயல், மான், பாம்பு, நரி, ஓநாய், சிறுத்தை போன்ற விலங்குகள் அதிகம் காணப்படுகின்றன. காட்டுக்கோழி, சேவல், ஆந்தை, கிளி போன்ற பறவைகளும் உள்ளன.

காடுகளைப் பற்றி நீ அறிந்தவை என்ன ?
நீ காட்டில் இருப்பதாகக் கற்பனை செய்து கொள்.
அங்கு என்னென்ன சத்தங்கள் கேட்கும் ?
உனக்குச் சாப்பிட அங்கு என்ன கிடைக்கும் ?
இங்குள்ள வசதிகள் என்னென்ன அங்கு இருக்காது ?

வாங்க, வரைபடத்தைப் பார்த்து நம் தமிழ்நாட்டில் காடுகள் உள்ள மாவட்டங்களைக் கண்டறிந்து எழுதலாம்.



____

____

____

____

____

____

____

____

____

குறியீடுகள்

- அடர்ந்த காடுகள்
- திறந்த வெளி காடுகள்
- புதர்கள்
- கால் நடைகள்



வயல்வெளிகள் (மருதம்)

என் பெயர் தேவன். என் ஊர் பத்தமடை. இது அழகான ஊர். எங்கு பார்த்தாலும் பச்சைப் பசேலென்று வயல்கள் இருக்கும். எங்கள் ஊரில் தாமிரவருணி ஆறு ஓடுகிறது. இதன் மூலம் எங்கள் ஊரில் உள்ள வயல்களுக்கு நீர் பாய்கிறது.

எங்களில் பலருக்கு விவசாயம் தான் தொழில். பருவகாலத்திற்கு ஏற்ப பல்வேறு பயிர்களை நிலத்தில் பயிரிடுகிறோம். நெல், கரும்பு, வாழை எங்களின் முக்கியமான பயிர்.

ஆற்றங்கரை ஓரங்களில் கோரைப்புல் வளரும். அதைக் கொண்டு பாய்முடைவோம். பருவ மழை பெய்யும். உழவுத் தொழில் செய்வதற்காக மழை நீரை ஏரி, ஊரணி, குளம் போன்றவற்றில் சேமிக்கிறோம்.

ஏர் உழ எருதுகளைப் பயன்படுத்துகிறோம். வயலில் உள்ள புழுக்களை உண்ண நாரைகள் வரும். வயலில் உள்ள எலிகளைப் பிடித்து உண்டு பாம்புகள் உழவர்களுக்கு நன்மை செய்கின்றன. நாங்கள் பொங்கல் விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடுகிறோம்.

விலங்குகளில் விவசாயிகளின் நண்பன் யார் ?

உன் ஊரில் உள்ள உழவுக் கருவிகளின் பெயர்களை எழுது ?

உழவுத் தொழிலோடு தொடர்புடைய மற்ற தொழில்கள் எவை ?

வரைபடத்தில் வயல் சார்ந்த பகுதிகளைப் பார்த்து அறிந்து கொள்ளலாமா ?



கடற்கரைப் பகுதிகள் (நெய்தல்)

நான் அந்தோணி. மீனவக் குடியிருப்பில் வாழ்கிறேன். என் அப்பா மீனவர். கடலுக்குப் போய் மீன் பிடிப்பார்கள். அம்மா அதைச் சந்தைக்குக் கொண்டு போய் விற்பார்கள்.

எனக்கு சுறா, திமிங்கலம், வேடன், காவலை, தோல்பாறை, கெளுத்தி, கடற்குதிரை, வாளை போன்ற விதவிதமான மீன்களைப் பற்றி நிறைய செய்திகள் தெரியும்.

நாங்கள் காயவைக்கும் மீன்களைக் கொத்திச் செல்ல பலவிதமான கடற்பறவைகள் வரும். ஆமைகள் முட்டையிட கடற்கரைக்கு வந்து செல்லும். ஈரப்பதத்தோடு கூடிய கடற்காற்று வீசும். எங்கள் பகுதியில் கலங்கரை விளக்கம் உள்ளது. கடலில் செல்லும் கப்பல்களுக்குக் கரையை அடையாளம் காண இதில் இருந்து வரும் வெளிச்சம் உதவுகின்றது.

கடற்கரையில் இருந்தால் என்னென்ன செய்வாய் ?
என்னென்ன பொருள்களைச் சேகரிப்பாய் ?
கடலைப் பார்த்தவுடன் உன் மனதில் என்னென்ன தோன்றுகின்றன ?
தமிழ்நாட்டுக்கு அருகில் உள்ள கடலின் பெயர் என்ன ?

தமிழ் நாட்டில் நீண்ட கடற்கரைப்பகுதி உள்ளது என்பதை வரைபடத்தின் மூலம் தெரிந்து கொண்டேன். அதை, நீங்களும் பாருங்களேன்.

வரைபடத்தைப் பார். கடலோர மாவட்டங்களை எழுது.

கடற்கரைப் பகுதிகள்



____

____

____

____

____

____

____

____

____

____

____

____

குறியீடுகள்

- குடியிருப்புகள்
- தென்னை
- கட்டுமரம்
- மீன் பிடி படகு
- மீன்கள்

வறண்ட நிலப்பகுதிகள் (பாலை)

தமிழ்நாட்டில் பாலை நிலம் இல்லை. வறண்ட நிலம் மட்டுமே உள்ளது. இங்கு வெப்பம் அதிகமாக இருக்கும். மழை குறைவு. வறண்ட காற்று வீசும். கள்ளிச் செடிகள், பனை, ஈச்சம் போன்ற வறட்சியைத் தாங்கும் தாவரங்கள் மற்றும் விலங்குகள் மட்டுமே காணப்படும்.

இங்கு கோடைக் காலம் மிகுந்த வெப்பமாக இருக்கும். இங்குள்ள மக்கள்வெப்பத்தையும், வறட்சியையும் தாங்கி வாழப் பழகியுள்ளனர். ஒரு துளி நீரையும் வீணாக்காமல் சேமிக்கின்றனர்.

காலம் காலமாக வறண்ட நிலத்திற்கு ஏற்ற விவசாயம் செய்து வருகின்றனர். இந்தச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு சொட்டு நீர்ப் பாசனம் மூலமாகத் தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துகின்றனர்.

சூரியகாந்தி, எள், நிலக்கடலை போன்ற எண்ணெய் வித்துக்களும் உளுந்து போன்ற பருப்பு வகைகளும் பயிரிடப்படுகின்றன. கொய்யா, மாதுளை போன்ற பழ மரங்களும் உண்டு. மூலிகையாக பயன்படும் கற்றாழை இங்கு நன்கு வளர்கின்றது. வல்லூறு, கழுகு, பருந்து போன்ற பறவையினங்கள் காணப்படுகின்றன.

நம் மாவட்டங்கள் வறண்ட நிலமாக மாறாமல் இருக்க மரங்கள் அதிகம் வளர்க்க வேண்டும். மரங்கள் மழையைக் கொண்டு வரும். மழை நீர் நிலத்தின் வறட்சியை நீக்கும்.

வறண்ட நிலங்கள்



வறண்ட நிலப்பகுதிகள்

____

____

குறியீடுகள்

- சோளம்
- மிளகாய்
- விளாம்பழம்
- கருவேல மரம்

நீ வாழுமிடம் இந்த ஐவகை நிலங்களில் எதைப் போன்றது ?

காலடி பதிவைப் பார்த்து இங்கு வந்த விலங்குகளைக் கண்டுபிடி.

11. சிறகுள்ள நண்பர்கள்

படத்தைப் பார். தாரணி இதில் ஒளிந்திருக்கும் பத்து பறவைகளைக் கண்டு பிடித்தாள். உன்னால் எத்தனை பறவைகளைக் கண்டு பிடிக்க முடியும் ? கண்டுபிடி, வண்ணமிடு. பெயர் எழுது.




வீட்டில் விரும்பி வளர்க்கும் பறவைகள் எவை ?

ஒவ்வொரு பறவைக்கும் அலகுகள் வேறுபடுவதைக் கவனித்திருக்கிறாயா ?

அலகு, கால்களைக் கொண்டு பறவைகளைக் கண்டுபிடி.. பெயர் எழுது.



உனக்குத் தெரிந்த வேறு ஒரு பறவையின் அலகை வரைந்து, பெயரை எழுது.

யார் இவர்கள் ? பெயர் எழுது.



எனக்கு இரவில் மட்டுமே கண் தெரியும். என்னால் தலையை முழுமையாகத் திருப்பி பின்புறம் பார்க்க முடியும். நான் ______________________
வானத்தில் உயரப் பறப்பேன். எத்தனை உயரத்தில் பறந்தாலும் எனது இரையைத் தரையில் சரியாக அடையாளம் காண்பேன். நான் தான்______________
என் தோகையும் கொண்டையும் மிக அழகாக இருக்கும். மழை வரும் பொழுது என் தோகையை விரித்தாடுவேன். ______________________என் பெயராகும்.
அடர் நீல நிறத்தில் இருப்பேன். ஆற்றங்கரைகளில் உள்ள பொந்துகளில் வாழ்வேன். மீனை விரும்பி உண்பேன். அதனால் ______________ என்று அழைக்கப்படுகிறேன்.

சிறகுள்ள நண்பர்கள் இன்னும் சிலரை அறிவோமா!

தவிட்டுக்குருவி

தமிழ்நாட்டில் காணப்படும் பழங்காலப் பறவைகளுள் ஒன்று. புழுக்கள், தானியங்கள், பழங்கள் ஆகியவற்றை உண்ணும். இப்பறவைகள் குழுவாகவே காணப்படும். ஒவ்வொரு குழுவிலும் ஆறில் இருந்து பத்து பறவைகள் இருக்கும். இதனால் தான் இவை ஏழு சகோதரர்கள் அல்லது சகோதரிகள் என்று அழைக்கப்படுகின்றன.

மைனா

அடர் பழுப்பு நிறத்தில் மஞ்சள் கோடுகள் இதன் தலைப்பகுதியில் காணப்படும். தமிழ்நாட்டின் எல்லா இடங்களிலும், இப்பறவைகள் காணப்படும். இதுவும் கிளியைப் போல பழக்கப்படுத்தினால் நாம் சொல்லும் வார்த்தைகளைத் திரும்பச் சொல்லக் கூடியது.

கருஞ்சிட்டு

மனிதர்களிடம் அன்பாகப் பழகும் பறவை. மரங்களிலும் அல்லது மரப் பொந்துகளிலும், புற்கள் காணப்படும் இடங்களிலும் இவை கூடுகள் கட்டும். பூக்களில் உள்ள தேனை உறிஞ்சிக் குடிக்கும். இது பாடும் பொழுது இதன் வால் மேலிருந்து கீழாக அசைந்து ஆடும்.

பறவைகளின் நண்பர்கள் ஆவோமா ?

தினமும் நீரும் தானியமும் வீடு / பள்ளித் தோட்டத்தில் வை. அவற்றை உண்ண பறவைகள் வருவதைக் கவனி.

செம்பூத்து

பழுப்பு நிறத்தில் நீண்ட வாலுடன் சிவப்பு நிற கண்களை உடையது. இப்பறவை "கூ, கூ" என்று குரல் எழுப்பும். இப்பறவைகளால் அதிகத் தொலைவு பறக்க முடியாது. மரங்களில் உள்ள பூச்சிகளை உண்ணும் ஆகையால், இவை மரங்கள் அதிகமாய் காணப்படும் பகுதிகளில் வாழும்.

தூக்கணாங் குருவி

கூடு கட்டுவதில் மிகச்சிறந்த பறவை. இதன் கூடுகளின் நுழைவு வாயில் குறுகலாய் கீழ் நோக்கி அமைக்கப்பட்டிருக்கும். விதைகளை உணவாகக் கொள்ளும். ஒரே மரத்தில் கூட்டமாகக் கூடுகளைக் கட்டி வாழும்.

இரட்டைவாயன்

இதன் வித்தியாசமான அலகினால் இந்தப் பெயரைப் பெற்றது. இப்பறவை அடர்ந்த காடுகளில் வாழும். இது நம் நாட்டின் பழமையான பறவைகளில் ஒன்றாகும்.

எந்தெந்த பறவைகள் கூடுகளை எங்கெங்குக் கட்டுகின்றன? அவை எப்படி இருக்கும்? காலியான கூடுகளைச் சேகரித்து வா. அக் கூடுகள் கட்டப் பயன்படுத்தப்பட்டுள்ள பொருள்களைப் பட்டியலிடு.

____________________ ____________________

____________________ ____________________

நீ பல பறவைகளைப் பார்த்திருப்பாய். சிலவற்றைப் பற்றிக் கேட்டிருப்பாய். நம் அன்றாட வாழ்வில் பறவைகளை உதாரணம் கூறிப் பேசும் வழக்குகள் பல உள்ளன. அன்ன நடை, கிளி மூக்கு, குயில் குரல், மயில் தோகை முடி. இதுபோல பறவைகளை வைத்துக் கூறப்படும் பேச்சு வழக்குகள், கதைகள் மற்றும் பொன்மொழிகளைச் சேகரி.

இந்தப் பறவைகளை நீ பார்த்திருக்கிறாயா ?

இவை மிக உயரமாகப் பறக்கும் பறவைகள். மிகப் பெரிய வலிமையான இறக்கைகள் உடையவை. இவற்றிற்கு மிகக் கூர்மையான பார்வை உண்டு. வேட்டையாடுவதில் சிறந்தவை. உயரத்திலிருந்தே கீழே நீரிலும், நிலத்திலும் உள்ள இரையை அடையாளம் காணும்.



பறவைகளால் ஏற்படும் நன்மைகள்.

பறவைகள் பழங்கள், தானியங்களை உண்டு பின் தன் எச்சத்தின் மூலம் அவற்றைப் பிற இடங்களில் பரவச் செய்யும்.

மரத்தில் உள்ள புழுக்களை உண்ணும். மரங்களை அழிவில் இருந்து காக்கும். வயல்களை நாசம் செய்யும் எலிகளை உண்டு பயிர்களைப் பாதுகாக்கும், மகரந்தச் சேர்க்கைக்கு உதவி செய்யும்.

நாம் வாழும் இடங்களுக்கு அழகும் வண்ணமும் இனிய ஒலிகளையும் தந்து சிறப்பிக்கின்றன.

நீங்கள் உங்கள் சுற்றுப்புறத்தில் பறவைகளின் இறகுகள் கீழே கிடப்பதையும் சில பறப்பதையும் பார்த்திருப்பீர்கள். காலத்திற்குக் காலம் பறவையின் இறகுகள் உதிர்ந்து மீண்டும் அங்குப் புதிய இறகுகள் முளைக்கும்.

சுற்றுப்புறத்தில் கிடைக்கும் வண்ண வண்ண இறகுகளைச் சேகரி. அவற்றைக் கொண்டு புது விதமான அலங்கரிப்புகளைச் செய்.

பறவைகள் நடப்பதைக் கவனித்திருக்கிறாயா ?

பறப்பதிலும் நடப்பதிலும் தலையை அசைப்பதிலும் பறவைகளிடையே வேறுபாடுகள் உள்ளன.

வகுப்பில் உள்ள மாணவர்கள் இரு குழுக்களாகப் பிரிந்து கொள்ளுங்கள் . ‘ஒரு குழு ஏதேனும் ஒரு பறவையைப் போல் நடந்து காட்டுதல், சத்தம் உண்டாக்குதல், கழுத்து அசைவு செய்தல். மற்ற குழு அது என்ன பறவை என்பதைக் கண்டுபிடித்தல்’ என்று விளையாடுங்கள்.

கலந்துரையாடு.

உனக்கு இறக்கை முளைத்தால் என்ன செய்வாய் ?
எங்கு செல்வாய் ? உனக்குப் பிடித்த பறவை எது ? ஏன் ?

உயரமாகப் பறக்க முடியாத பறவைகளைக் கண்டுபிடி. வட்டமிடு.



வேடந்தாங்கல்

வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம்.

நம் இந்திய அரசு பறவைகளைப் பாதுகாக்கச் சரணாலயங்களை ஏற்படுத்தியுள்ளது. வேடந்தாங்கல், தமிழ்நாட்டில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ளது. இது புலம் பெயர்ந்த பறவைகளின் வீடு. இங்குள்ள சிறிய ஏரி பலவகை பறவை இனங்களைக் கவர்ந்து இழுக்கிறது. இது குளிர்ப் பகுதியில் இருந்து இங்கு வரும் பறவைகளுக்குப் புகலிடமாக உள்ளது.

பயிர் விளைச்சலை அதிகப்படுத்த இங்கு வருகின்ற பறவைகள் உதவுகின்றன. அவை ஏரியில் இடும் எச்சங்கள் கலந்த நீர் சிறந்த உரமாகப் பயன்படுகின்றது . அதனால், இந்தக் கிராம மக்கள் பறவைகளைப் பாதுகாக்க வேண்டியது அவசியம் என நினைக்கின்றனர்.

புலம் பெயரும் பறவைகள்

கடும் பனியைத் தவிர்க்கவும், உணவைத் தேடியும் பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்து பறவைகள் இங்கு வருகின்றன. இதற்கு வலசை போதல் என்று பெயர். நவம்பர் முதல் மார்ச் வரை சொந்தக் கூடு கட்டி இவை இங்கு தங்குகின்றன. குறைந்த பட்சம் ஐம்பது ஆயிரம் வெளிநாட்டுப் பறவைகள் இங்கு வருகின்றன.

இங்கு வாழும் மக்கள் பறவைகளைப் பயமுறுத்தும் எந்தச் சத்தத்தையும் நிகழ்ச்சியையும் சரணாலயத்திற்கு அருகே அனுமதிப்பதில்லை. பறவைகள் முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும் காலத்தில் தங்களின் பண்டிகைகள் மற்றும் திருமணம் போன்ற விழாக்களைச் சத்தத்தைத் தவிர்த்து கொண்டாடுகின்றனர். இது அவர்கள் பறவைகளின் மேல் வைத்துள்ள அன்பை வெளிப்படுத்துகிறது.

கோடைக்காலம் முடிந்ததும் அவை கூட்டம் கூட்டமாகத் தங்கள் நாட்டிற்குத் திரும்பிச் சென்றுவிடும். அந்தக் கிராம மக்கள் மீண்டும் ஆறு மாதம் காத்திருந்து அவற்றை வரவேற்கத் தயாராகின்றனர்.

நம் மாநிலத்தில் வேடந்தாங்கல், சாத்தான் குளம், கோடியக்கரை போன்ற இடங்களில் பறவைகள் சரணாலயங்கள் அமைந்துள்ளன.

மரங்கள், விவசாய நிலங்கள், நீர்நிலைகள் போன்றவை பறவைகளின் வாழிடங்களாக உள்ளன. அரிய பறவைகள் அழியாமல் காக்க மரங்களையும் பல்வேறு தாவரங்களையும் வளர்ப்போம். நீர்நிலைகளை மாசுபடாமல் பாதுகாப்போம்.

பரதன்

துஷ்யந்தன் என்னும் அரசனின் மகன் பரதன். அவனுடைய தாயின் பெயர் சகுந்தலை.

பரதன் சிறு வயது முழுவதும் தன் தாயுடன் காட்டில் வாழ்ந்தான். அவன் மிகுந்த தைரியசாலி. புலி, சிங்கம் அவனது விளையாட்டு நண்பர்கள். அவற்றின் வாயைத் திறந்து பற்களை எண்ணும் அளவிற்கு வீரம் உடையவனாக வளர்ந்தான்.

பரதன் தன் இளம் வயதிலேயே அரச பதவியை ஏற்றார். இமயம் முதல் குமரி வரை இந்தியா முழுவதையும் வென்று, தன் ஆட்சியின் கீழ் கொண்டு வந்தார். எனவே, சக்கரவர்த்தி என்று அழைக்கப்பட்டார். இவர் ஆட்சி செய்த பகுதியைப் பரத கண்டம் என்று அழைப்பர். ஆட்சி புரிவதில் பேரும் புகழும் பெற்று விளங்கினார்.

பரத கண்டமே இன்றைய இந்தியா ஆகும். நமது இந்திய நாடு பரத மன்னனின் நினைவாகவே இன்றும் பாரத நாடு என்று அழைக்கப்படுகிறது.

ஜான்சிராணி

1828 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் நாள் வாரணாசியில் (காசி) ஒரு பெண் குழந்தை பிறந்தது. அக் குழந்தையின் பெயர் மணிகர்ணிகா. இவரை மனு என்றும் அழைப்பர். வீட்டிலேயே கல்வி கற்றார்.

தற்காப்பு, குதிரையேற்றம், வில் வித்தை, வாள் பயிற்சி போன்றவற்றில் சிறந்தவர். அரசவையில் உள்ள தம் தோழியரைச் சேர்த்துக் கொண்டு இவர் ஒரு மகளிர் படை அமைத்தார்.

ஜான்சி நாட்டின் அரசன் கங்காதர ராவை தம் 14ஆம் வயதில் மணந்து கொண்டார். திருமணத்திற்குப் பிறகு அவர் லட்சுமிபாய் என அழைக்கப்பட்டார். கணவர் இறந்த பிறகு இவரே ஜான்சி நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். லட்சுமி பாய் 1857 ஆம் ஆண்டு நடந்த இந்திய முதல் விடுதலைப் போரில்

பங்கேற்றார். ஆங்கில ஆட்சியை எதிர்த்து குதிரை மீதேறி போர்க்களத்திற்குச் சென்றார். ஆண் வேடமிட்டு தன் வளர்ப்பு மகனைத் தன்னுடன் சுமந்தபடியே போரிட்டார். 1858ல் போர்க்களத்தில் வீர மரணம் அடைந்தார்.

ஜான்சியின் ராணியான, இவர் தைரியமும். வீரமும் நிறைந்தவர். இந்திய தேசியப் படையின் முதல் பெண்கள் பிரிவிற்கு இவருடைய பெயர் சூட்டப்பட்டது. ஜான்சிராணி இந்திய வீரப் பெண்மணிகளில் குறிப்பிடத்தக்கவர்.

காகித வீடு



ஒரு சதுர வடிவ காகிதத்தை எடு.
அதை 16 கட்டங்களாக மடி.





காகிதத்தின் இரு முனைகளில் உள்ள கட்டங்களை மட்டும் படத்தில் உள்ளது போல் வெட்டு.





வெட்டப்பட்ட சதுர பகுதிகளில் நடுவில் உள்ளவற்றை, ஒன்றின் மீது ஒன்று வைத்து ஒட்டு.





பின் இரு ஓரங்களிலும் உள்ளதை ஒன்றின் மீது ஒன்று ஒட்டு.



இதே போல் அதன் எதிர் பக்கமும் ஒட்டு.

வீடு தயார்.



கதவு, ஜன்னலை உன் விருப்பப்படி வரைந்து வண்ணமிடு.

இது போன்ற வெவ்வேறு வகையான வீடுகளை உன் ஆசிரியர் உதவியுடன் செய். அவற்றைக் கொண்டு உன் தெருவின் மாதிரியை உருவாக்கு. இது போல ஒரு ஊரின் மாதிரியையே உருவாக்கலாம் அல்லவா!

மீன் கொத்தி வரைவோமா ?

①



②



③



④



⑤



⑥